"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

சைவ முன்னேற்றச் சங்கம் UNITED KINGDOM கலசம்

# கலசம்
# KALASAM

SAIVA MUNNETTA SANGAM UNITED KINGDOM

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி 2010



சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந் தருந்தி அல்லல்தீர் கருவூர்
அறைந்தசொல் மாலையீ ரைந்தின்
பொருள்மருந் துடையோர் சிவதம் என்னும்
பொன்னெடுங் குன்றுடை யோரே.

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்


SHARON
Importers, Wholesalers, Distributor & Retailers
Specialist in: Srilankan and Indian Products
Fresh Fruits
Vegetables
Fish
Groceries
Off Licence
Food Products
311-313 Mitcham Road, Tooting, London SW17 9JQ
T: 020 8672 9353
F: 020 8672 6353
E: sharonsfood@aol.com

மணி 18

# கலசம்
# KALASAM

ஒலி 68

www.saivamunnettasangam.com

FREE ISSUE

## அறிவை வளர்ப்போம்! அகலச் சிந்திப்போம்!

தமிழிலே பூசை செய்யவேண்டும், தமிழிலே பூசை செய்யவேண்டும் என்று ஒரு கோஷம் கேட்டவண்ணமே இருக்கிறது. அதற்குச் சொல்லப்படும் காரணங்கள்:

1. ஐயர் சொல்வது எங்களுக்கு விளங்குவதில்லை
2. மற்றைய மதங்களில் வழிபாட்டைத் தமிழிலே செய்கிறார்களே! என்பவை.

சுமார் 50 வருடங்களுக்கு முன்புவரை இருந்த தமிழ், சைவ அறிஞர்கள் யாருக்கும் இப்படி ஒரு சிந்தனை வராதது மிகவும் வியப்பைத் தருகிறது. ஒன்றில் அவர்கள் தமிழ்த் துரோகிகளாக இருந்திருக்க வேண்டும். அல்லது அறிவிலிகளாக இருந்திருக்கவேண்டும் என்றே எண்ணத் தோன்றுகிறது. நம்முடைய சமய குரவர் முதல் ஆறுமுக நாவலர் வரை அனைவரும் இந்தப் பட்டியலிலே சேர்கிறார்கள். ஐயர் சொல்வது விளங்காததால் மட்டும் தமிழிலே பூசை செய்யவேண்டும் என்றால், இன்னும் சில வருடங்களில் ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு மொழி களிலே பூசை வேண்டும் என்று எம் அடுத்த சந்ததி கேட்கும். அது தவிர, எம் கோயில்களுக்குப் பிறமொழி பேசும் இந்து மக்கள் பலர் வருகின்றார்கள். அவர்களுக்கெல்லாம் அவரவர் மொழியிலே வழிபாடு நடத்தவேண்டாமா?

நாம் தமிழிலே பாடிப் பரவ என்றுதானே திருமுறைகள் இருக்கின்றன. அவற்றையே விளங்கவில்லை என்ற காரணம் காட்டி, பலவிதமான பாடல்களைக் கோயில்களிலே பாடிக்கொண்டிருக்கிறோம். மாணிக்கவாசகர் 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்' என்று பாடினாரே தவிர 'பொருள் அறிந்து' என்று பாடவில்லை. உணர்தல் வேறு; அறிதல் வேறு. திருவாசகத்தின் பொருள் என்ன என்று கேட்டபோது சிதம்பரத்திலே அவர் நடராஜமூர்த்தியை சுட்டிக்காட்டியதாகவே வரலாறு இருக்கிறது. எனவே பொருள் உணர்தல் என்றால் இறைவனை உணர்தல் என்றுதான் வரவேண்டும். இறைவனை உணர முடியுமே தவிர அறிய முடியாது.
'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே' என்ற அடிகளை நாம் மனத்திருத்த வேண்டும்.

மற்றைய மதங்கள் வேறு. சைவம் வேறு. சைவத்திலே உள்ள சித்தாந்தத் தத்துவங்கள் பல மறு சமயங்களிலே இல்லை. அதனாலேதான் நாம் சைவத்தை உயர்ந்தவொரு சமயமாகக் கருதி இன்னும் அதன் வழி ஒழுகி வருகிறோம்.

நாத்திகவாதிகளும் சமுதாயத்தில் தமக்கென ஒரு பெயரைப் பதிக்கவேண்டும் என்று நினைப்பவர்களுமே தமிழ் பூசையை வலியுறுத்தி வருகின்றனர். உண்மையான சைவர்கள் நமக்கு முன்னிருந்த அருளாளர்களும் ஞானிகளும் அளித்த நல்ல திருமுறைப் பாடல்களை ஓதி அவர்கள் காட்டிய வழியில் வழிபடுவதே சாலச் சிறந்தது. **நம் அறிவை நாம் உயர்த்தவேண்டுமே தவிர சமயத்தை நம் நிலைக்கு கீழே கொண்டுவர முயல்தல் தவறு. அறிவை வளர்ப்போம்; அகலச் சிந்திப்போம்.**

க ஜெகதீசுவரன்

**நிர்வாகக் குழு:** திரு. க. ஜெகதீசுவரன் (ஆசிரியர்) திரு. ச. ஆனந்ததியாகர் திரு. சி. தம்பு
திரு. சி. அற்புதானந்தன் திரு. வ. இ. இராமநாதன் திரு. சு. வைத்தியநாதன்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# இந்த இதழில்


வேண்டியவர் செய்யும் வேண்டாத செய்கை - கந்தபுராணம் 03

காசி - முத்தித்தலங்கள் (பயணக்கட்டுரை) 06

திருவையாறில் கயிலைக் காட்சி - நாவுக்கரசர் அற்புதங்கள் 12

Hinduism in search of Answers 16

Navarathri 18

தண்டியடிகள் - மூர்க்க நாயனார் - பெரியபுராணத்தொடர் 22

லால்குடி ஸ்ரீ ஜயராமன் 26

ஆசௌச விளக்கம் 30

திருமுறைகளிற் சிதம்பரம் 33

கண்ணனும் தாத்தாவும் 38

Deepavali 41

Saktham 42

திருக்குறள் கற்போம் 47


**அட்டைப்படம்: இராசராசேச்சரம் என்ற தஞ்சைப் பெரியகோயிலுக்கு**

**இந்த வருடம் வயது** 1000. **படம்: ச வேதா**

# வேண்டியவர் செய்யும் வேண்டாத செய்கை

## கந்தபுராணச் சிந்தனைகள்

சிந்திப்பவர் - முனைவர் சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

போரிலே எவ்வளவு உக்கிரம் தேவையோ, வெற்றியிலே அவ்வளவு நிதானம் தேவையென்று மகா அலெக்சாந்தர் சொன்னதாகச் சொல்வார்கள். அது மாத்திரமன்றி, வெற்றியின் போது ஒவ்வொருவரையும் அவர்களின் பங்களிப்புக்கேற்ற வகையிலே அலெக்சாந்தரே நேரடியாகக் கௌரவப் படுத்தியதாகவும் சொல்லப்படுகிறது. இவையெல்லாம் கூட, வந்த உற்றார், பிழையான வழிகளிலே வெற்றியைத் திசைதிருப்பக் கூடாது என்பதற்காக அலெக்சாந்தரால் கைக் கொள்ளப்பட்ட விதிகளாகும். ஒருவர் மிகவும் கடும் முயற்சியைத் தொடர்ந்து செய்து வாழ்க்கையிலே முன்னேறுகிறார். முன்னேற்றத்தையும், அது கொடுத்த வசதியையும், அதிகாரத்தையும், பதவியையும் விரும்பிப் பல உற்றார்கள் சேர்கின்றார்கள். இந்த 'வேண்டியவர்கள்' வந்து செய்கின்ற பல 'வேண்டாத காரியங்களினால்' அவருடைய முன்னேற்றம், வெற்றி எல்லாம் தீயொழுக்கத்துக்கு அரணாகிவிடுகின்றது. மேலும் முன்னேறியவர் மது விடயத்திலோ, மாது விடயத்திலோ சற்றுப் பலவீனமுடையவராக இருந்தாற்போதும். இந்த வேண்டியவர்கள் அவரை அதல பாதாளத்திற்கே தள்ளிவிடுவார்கள். சூரனுடைய வாழ்வும் இவ்வாறே அழிகின்றது. இதனாலே முன்னேறுபவர்கள் தன்னுடைய முன்னேற்றம் இந்த வேண்டியவர்களால் திசைதிருப்பப்பட்டுத் தீ நெறிக்கு அரணாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமெனக் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது.



இழிநிலைக்கு வந்துவிட்ட அசுரகுலத்தின் மேன்மைக்காக தாயார் மாயையினால் உருவாக்கப்பட்ட சூரன் கடுந்தவம் செய்கிறான். பெருவரங்கள் பெறுகின்றான்.

பெற்ற வரங்களினாலே சூரன் இந்திரன், பிரம்மா, விஷ்ணு எல்லோரையும் வென்று தன்னுடைய ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசாட்சி செய்து வருகின்றான். அப்போது அவனுக்கு இந்திரனின் மனைவி இந்திராணி மேல் ஆசையேற்படுகிறது. அசுரப் பெண்களைப் படையாக அனுப்புகிறான். அறிந்த இந்திரனும் இந்திராணியும் ஒளித்துப் பூலோகத்துக்கு வந்து விடுகிறார்கள். சூரன்கோபம் கொண்டான். எங்கும் தேடுவித்தான். கண்டு பிடிக்க முடியவில்லை. நிலைமை அவ்வாறே இருந்திருக்கும். ஆனால் சூரனின் தங்கை அசமுகி சம்பந்தப்படுகிறாள். சூரனுக்கு 'வேண்டியவளான' அசமுகி வேண்டாத, சூரனின் அழிவிற்கு காரணமாக 'தேவர்சிறை'க் குக் காரணமாகிறாள். அசமுகியின் சம்பந்தத்தினால் இந்திரபுரி அழிக்கப் பட்டுத் தேவர்கள் சிறைப்படுகிறார்கள். இதனாலேயே அசுர கிளை மாள்வதற்கான யுத்தம் ஏற்பட்டது. இனி நிகழ்வுகளுக்கு வருவோம்.

பூலோகத்துக்கு வந்து விட்ட இந்திரன் சிவபூசைகள் செய்து கொண்டிருக்கின்றான். தேவர்கள் அவனைத் தேடுகிறார்கள். இறுதியாக அவனைக் காண்கின்றார்கள். எக்காலத்திலும் உம்மை நம்பியிருந்த நாங்கள் அவுணர்களால் வாட்டம் அடைந்து துன்பத்தில் வருந்த உங்களுடைய உயிரைப் பாதுகாத்துக் கொண்டிருப்பது முறையா? எங்கள் துன்பம் தீர ஏதேனும் முயற்சி செய்யுங்கள் என்று

தேவர்கள் இந்திரனை வேண்டினார்கள். இந்திரன் சிவபெருமானைக் காணக் கயிலாய மலைக்குப் போகத் தீர்மானிக்கிறான். மனைவியை ஐயப்பசுவாமியின் காவலில் விடத்தீர்மானித்து அவரை வேண்டுகிறான். அவர் தன்னுடைய அடியவரான வாள் வித்தையில் வல்ல மாகாளரைக் காவலுக்கு நியமிக்கிறார். இந்திரன் கைலை செல்கிறான். இந்திராணி தவம் செய்து கொண்டிருக்கிறாள். அப்போது தற்செயலாக அசமுகி அங்கு வருகி றாள். பெருமையுடன் வாழ்கின்ற சூரபன்பனின் உறவினர் எல்லோரையும் அடியுடன் அழி விப்பதற்கேற்ற நியதியான ஊழ்வினை வந்தாற் போலச் சூலப்படையை எடுத்துக்கொண்டு துன்முகி என்ற பெண்ணோடு நஞ்சின் உருவமென அசமுகி அங்கு வந்தாள் என்று கந்தபுராணம் சொல்கிறது.

**மாலுற்றிட வாழ்சூரபன் மாவின்கிளை முழுதும்**
**மூலத்தொடு முடிவித்திடு முறையூழ்வினை யென்னச்**
**சூலத்தினை யேந்தித்தனி தொடர் துன்முகி யுடனே**
**ஆலத்தின துருவாமென ஆங்குற்றனள் அன்றே**

**அசமுகிப் படலம் 10**

இந்திராணியைக் கண்ட அசமுகி இவளை அசுரர்கள் சகல இடங்களிலும் தேடித்திரி கிறார்கள். இவளை யானே பிடித்துச் சென்று எங்கள் மன்னர் மன்னவனான சூரன் மகிழும் படியாக அவரிடம் கொடுப்பேனென்று நினைத்தாள். அவள் இந்திராணியைப் பார்த்து தன்னுடன் வந்து சூரனுடன் சேர்ந்திருக்குமாறு அழைத்தாள். அசமுகியின் வார்த்தைகளைக் கேட்ட இந்திராணி காதுகள் இரண்டிலும் தீயில் காய்ச்சப்பட்ட வேல் நுழைந்தது போல் வருந்தி அழுதாள். பிறகு அவள் அசமுகியைப் பார்த்து, 'நீ சொல்வது மிகவும் பிழையான காரியம். பெரிய ஒரு மகானுக்குப் பிள்ளையாகப் பிறந்த நீ, இவ்வாறு சொல்லலாமா? மறைகள் எல்லாவற்றையும் அருளிச் செய்த நான் முகனின் மகனான, காசிப முனிவர் பெற்ற பெண்ணான நீ, நீதி நெறிக்குப் பொருந்தாத ஒன்றை அறிவற்றவரைப் போல் பேசுதல் தகுதியோ?' என்று சொல்கிறாள். தொடர்ந்து, 'ஆகையால் பெண்ணே இந்த எண்ணத்தை மறந்துவிடு' என்று இந்திராணி சொன்னாள். அசமுகி சினம் கொண்டாள். இந்திராணியை இழுத்துக்கொண்டு செல்லத் தொடங்கினாள். இந்திராணி கதறிப்புலம்பினாள். ஐயனாரை வேண்டினாள். மாகாளர் வந்து சேர்ந்தார். மாகாளர் அசமுகியைத் தடுத்தார். அசமுகி அவரின் மீது சூலத்தை ஏவினாள். சூலத்தை அழித்த மாகாளர் அசமுகியின் கையையும், துன்முகியின் கையையும் வெட்டினார். அசமுகி அழுது துடித்தாள். பலப்பல எண்ணினாள். கடைசியாகத் தோழியான துன்முகி தேற்றத் தேறி இந்திராணியைச் சிறை பிடிப்பதாகச் சபதம் கூறிவிட்டு நேரே சூரனுடைய சபைக்கு சென்றாள். மீண்ட இந்திரன் இந்திராணியுடன் மேருமலைக்குச் சென்றான். அரச சபைக்குச் சென்ற அசமுகி, 'அண்ணனே கைவெட்டப் பெற்றேன். எனக்கு இனி யார் தாம் உறவினர் ஆவர். அங்கம் குறைந்தவர் இருப்பதும் வசையல்லவா? நான் இறக்கப் போகின்றேன்' என்று கதறினாள். கோபம் கொண்ட சூரன் உன் கையை யார் வெட்டினார்கள். என்று கேட்க 'இந்திரனின் மனைவியான இந்திராணி பூவுலகத்தில் ஓரிடத்தில் இருந்து தவம் செய்ய, நாம் அவளை உனக்குரியவளாக்க வேண்டும் என்று எண்ணிப் போய்க் கவர்ந்தோம். அப்போது ஒரு தேவன் விரைவாக வந்து எம் கைகளை வெட்டி இந்திராணியை மீட்டுச் சென்றான்.' என்று அசமுகி சொல்கிறாள். இவ்வாறு அசமுகி கூறக்கேட்டதும், சூரன் கடுங்கோபங் கொண்டான். அவனுடைய கோபத்தைத் தணிக்க அவனுடைய அனும தியுடன் பானுகோபன் படையுடன் இந்திரபுரிக்குச் சென்றான். இந்திரபுரியையும் அழித்து தேவர்களையும், இந்திரன் மகன் சயந்தனையும் சிறைப்பிடித்துக் கொண்டு திரும்பினான். சூரன் திருப்தியடைகிறான். தேவர்கள் சிறையிலே வாடுகின்றார்கள். தேவர்கள் சிவபெருமானை வேண்டுகிறார்கள். அவர்களின் வேண்டுதலுக்கிரங்கிய சிவ னருளால் முருகப்பெருமான் அவதாரம் செய்கிறார். தேவர்களைச் சிறைவிடும்படி வீரவாகு தேவரைச் சூரனிடம் தூதாக அனுப்புகிறார் முருகப்பெருமான். சூரனின்

அரசசபைக்குள் புகும் போது அந்நகரின் வளங்களையும் சூரனின் கம்பீரத்தையும் கண்ட வீரவாகு தேவர் அறிவில்லாத ஒரு தூக்க ணாங்குருவி, தான் வாழுங்கூட்டில், ஒரு ஒளி யுடைய கொள்ளிக்கட்டையை மின்மினிப்பூச்சி என்று எண்ணிக் கைக்கொண்டு வந்து தன் குஞ்சுகளுடன் வைத்து கூட்டோடு தானும் எரிந்து அழிந்த கதையைப்போல, இந்தச் சூரனும் ஐயா என அலறும் தேவர்களைச் சிறை வைத்ததனால் அழியப்போகிறான் என்று நினைகின்றார்.

**மெய்ச்சோதி தங்கு சிறுகொள்ளி தன்னை**
**விரகின்மை கொண்ட குருகார்**
**கச்சோத மென்று கருதிக் குடம்பை**
**தனினுய்த்து மாண்ட கதைபோல்**
**அச்சோ வெனப்பல் இமையோரை ஈண்டு**
**சிறைவைத்த பாவம் அதனால்**
**இச்சூர பன்மன் முடிவெய்து நாளை**
**இதனுக்கோர் ஐய மிலையே**
**அவைபுகு படலம் 43**

இவ்வாறு சூரனின் கிளையோடுடனான அழிவுக்கு, உற்றாரான அசமுகியின் செய்கையே காரணமாயிற்று. இதனாலே உயர்ச்சியடைந்தோர் தம்முடைய செய்கைகளிலல்லாது, தம்மைச் சார்ந்தோரின் செய்கைகளிலும் குற்றம் வராதவாறு கவனமாக இருக்க வேண்டுமென கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது.

## கடவுளுக்குப் பின்னால் யார்?

**தென்கச்சி சுவாமிநாதன் நன்றி: சக்தி விகடன்**

அவர் ஒரு சந்யாசி. ஒரு நாள் கனவொன்று கண்டார். கனவில் அவர் சொர்க்கத்துக்குச் சென்றார். அங்கு ஏதோ பெரிய திருவி ழாவுக்கான அறிகுறி தெரிந்தது. பாதை ஓரத்தில் நிறைய மக்கள் கூட்டம். அவர்களிடம், 'இங்கு என்ன விசேஷம்?' என்று கேட்டார் சந்யாசி. அவர்களுள் ஒருவன், 'என்ன இப்படிக் கேக்கறே? நீ ஊருக்குப் புதுசா?' என்றான்.

'ஆமாம்' என்றார் சந்யாசி.

இதைக் கேட்டதும் ஒருவன் விஷயத்தைக் கூறினான், 'இன்று கடவுளின் பிறந்த நாள் விழா'

'ஓ! அப்படியா?!'

'ஆமாம்... இன்னும் கொஞ்ச நேரத்தில் மாபெரும் ஊர்வலம் வரப்போகிறது. அதில் கடவுளும் கலந்துக்கப் போறார்'

இதைக் கேட்டதும் சந்யாசிக்கு ஆர்வம் அதிகமானது. அவர் சாலை ஓரமாக ஒரு மரந-ிழலில் ஒதுங்கி நின்றுகொண்டார். சிறிது நேரத்தில் ஊர்வலம் வந்தது.

முதலில் ஒரு குதிரை. அதன்மீது கம்பீரமாக ஒருவர் அமர்ந்திருந்தார். அவரைத் தொடர்ந்து நிறையப்பேர் நடந்து வந்தனர்.

'இவருக்குப் பின்னாடி இவ்வளவு கூட்டம் வரு கிறதே! யாரிவர்?' என்று விசாரித்தார் சந்யாசி. அவரிடம் ஒரு மதத்தின் பெயரைச் சொன்னவர்கள், 'குதிரையில் வருபவர் அந்த மதத்தின் தலைவர். அவரைப் பின்பற்றும் மக்கள் கூட்டம் அவரைத் தொடர்கிறது' என்று விவரம் சொன்னார்கள். அடுத்தப்படியாக இன்னொருவரும் குதிரையில் வந்தார். அவருக்குப் பின்னாலும் ஏகப்பட்ட மக்கள் கூட்டம்.

'இவர் யார்?'

உடனே இன்னொரு மதத்தின் பெயரைச் சொன்னவர்கள் 'இவர் அந்த மதத்தின் தலைவர். அவரது வழியைப் பின்பற்றுவோர் அவரைத் தொடர்கின்றனர்' என்று விவரித்தனர். இப்படி ஒவ்வொருவராக குதிரையில் வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பின்னால் ஒரு பெரிய மக்கள் கூட்டம். ஒரு வழியாக அந்த நீண்ட ஊர்வலம் முடிந்தது. சிறிது நேரம் கழித்து ஒரு வயதானவர் குதிரை மீது வந்துகொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் எவருமே இல்லை. மிகப் பரிதாபமாக தனியே வநதுகொண்டிருந்த அவர் ஊர் வலத்தைச் சேர்ந்தவரா இல்லையா என்பதே தெரியவில்லை.

'இவர் யார்...? ஏன் இப்படித் தனியே வந்துகிட்டிருக்கார்?' என்றார் சந்யாசி.

கூட்டத்தில் ஒருவர் சொன்னார், 'என்ன இப்படிக் கேட்கறீங்க? இவர்தான் கடவுள். முன்னாடிப் போகும் கூட்டமெல்லாம் இவர் பிறந்த நாளைக் கொண்டாடத்தான்!!'

இதைக் கேட்டதும் அந்த சந்யாசிக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவர் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டார். அப்புறம் யோசித்துப் பார்த்தார். 'தான் உண்மைக்குப் பின்னால் போவதாக நிறையப்பேர் சொல்கிறார்கள். ஆனால் அந்த உண்மை அநாதையாகப் போய்க்கொண்டு இருக்கிறது.'

கடவுளைப் பின்பற்றுவதாக பத்தர்கள் நினைக்கிறார்கள். ஆனால் கடவுளுக்குப் பின்னால் எவருமே இல்லை.



# காசி

(முத்தித் தலங்கள்) பயணக்கட்டுரை

**சாவகச்சேரியூர் டாக்டர் கதிர்காமநாதன்**

சிவனுக்கு சங்கரன், மகேஸ்வரன், உமாபதி, அரன், நடராஜன், நீலகண்டன் என பல பெயருண்டு. காசி விசுவநாதர் புகழ்போன்று அங்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பாயும் 'கங்கை' நதியும் புகழும் புனிதமும் உடையது.

**காசிக்கு நிகரான பதியுமில்லை**
**கங்கைக்கு நிகரான நதியுமில்லை**

காசி ஏழு முத்தித் தலங்களுள் முதன்மையானதும் தலைசிறந்ததுமாகும். காசி என்றால் ஜோதி மயமானது, பிரகாசமானது என்று பொருள். காசிக்கு 'அவிமுக்தா ஷேத்திரம்' என்ற பெயர் உண்டு. அவிமுத்தா என்பது பாவத்திலிருந்து விடுபடல் என்று கூறுவர். ஆனந்தவனம் - சிவனின் அடையாளமான லிங்கங்கள் எங்கும் பரவியிருப்பதால் இதைவிட 'ருத்திர வாசம்' என்ற பெயரும் உண்டு. காசியை விட்டு நகராமல் சிவன் இருப்பதால் இப்பெயர் கூறப்படுகின்றது. வரணாசி - வருணா என்றால் வடக்கு எல்லை ஆறும் அசி என்ற தெற்கு எல்லை ஆறும் இரு பக்கமும் இருப்பதால் - குறிக்கப்படுகின்றது. தற்போது இப்பெயர்தான் பிரபலம் என்றாலும் ஆங்கிலேயர் காசியை 'பனாரஸ்' (Banares) என்று பெயரிட்டனர்.

காசியிலிருக்கும் தலந்தான் விசுவநாதர் கோயிலாகும். யாவரும் இக் கோயிலை காசி விசுவநாதர் என்றே அழைப்பர். இதைவிட,

காசி விமான நிலையத்தை, டில்லியிலிருந்து புறப்பட்ட விமானத்தின் மூலம் அடைந்தோம். சிறிய விமான நிலையந்தான். எனினும், **(Holy City Welcomes You)** புனித நகரம் உங்களை வரவேற்கிறது என்ற வரவேற்பு வாசகத்தைப் படித்தவுடன் என் உள்ளம் பெற்ற உவகையையும் உணர்ச்சியையும் சொல்லிலே கூற முடியாது. ஆன்மிகவாதிகள், அறிஞர்கள், மகான்கள், முனிவர்கள், ரிஷிகள், சித்தர்கள், பாரதியார் மட்டுமன்றி எமது யோகர் சுவாமிகள் காலடி பட்ட இடத்தில் கால் வைக்கிறோமே என்ற உணர்வேதான் ஒருவித திருப்தியையும் பத்தியையும் தோற்றுவித்தது.

அன்று மாலை கங்கைக் கரை சென்று மூன்றாம் பிறை பார்க்க புறப்பட்டோம். சைக்கிள் ரிக்ஷா ஒன்றைப் பேரம்பேசி தங்கியிருந்த ஹோட்டலிலிருந்து சென்றோம். காசியில் சைக்கிள் ரிக்ஷாதான் வாகனம். ஒரே 'ரிங், ரிங்' என்ற கிண்கிணி மணியோசைதான். குண்டும் குழியுமான பாதையில் செல்லும்போது மிக நடுக்கம் உண்டாகும்! அபாயமில்லை. கங்கைக் கரை சென்று அரைகுறை ஆங்கில அறிவுள்ள ஒருவரைப் பிடித்து படகொன்றில் கங்கையை வலம்வந்தோம். செல்லும்போது பல சடலங்கள் கரையிலே எரிவதைக் கண்டோம். ஆனால் பிறையைக் காணவில்லை. இறைவனின் திருவுள்ளம் அதோ? படகோட்டி எம்மை ஓரிடத்துக்கு கொண்டுசென்றான்.

**கங்கை ஆர்த்தி:**

ஐந்து அழகிய உடை அணிந்த ஆசாரியர்கள் ஒரே நேரத்தில் ஒரே மாதிரி அசைவில் கங்கையை வழிபட்டனர். மணியும் மேளமும் ஒலிக்க, பின்னணியில் பாட்டு ஒலிக்க. ஒருமித்து தூபம், தீபம், கர்ப்பூர ஆரத்தியை பத்தியுடன் காட்டினர். ஒரு மணித்தியாலம்வரை இது நீடித்தது. நாங்கள் கங்கை நதியின்மேல் படகில் இருந்தபடியே இதைப் பார்த்தோம். ஆரத்தி முடிந்ததும் யாவரும் ஆசாரியர்களை விழுந்து வணங்கி ஆசியும் பிரசாதமும் பெற்றனர். இத்தகைய காட்சியை நாங்கள் வேறு எந்த இடத்திலும் காணவில்லை. ஒரு கண்கொளாக் காட்சி.

மறுநாள், செவ்வாய்க்கிழமை. ஆவணி சதுர்த்தி. காலை நாலு மணிக்கே எழுந்தோம். அதே ரிக்ஷாக்காரன் எமக்காகக் காத்திருந்தவன் போலக் காணப்பட்டான். மணிகர்ணிகாவிற்கு அவனுடன் சென்றோம்.

**மணிகர்ணிகா:**

இது கங்கையில் நீராடும் ஒரு துறையாகும். இங்கு விஷ்ணுவின் தவத்தை மெச்சி, சிவபெருமான் தலையாட்டும்போது காதில் இருந்த குண்டலத்தின் மணி ஒன்று விழுந்ததாம். இதனால் இந்த இடத்துக்கு இப்பெயர் வந்தது. இந்த இடத்துக்கு எதிரே சொர்க்கமும் துரும்பாம். நாங்கள் சென்ற சமயம் அங்கு ஒருவருமில்லை. இது சரியான இடந்தானோ என்று பீதியடைந்தோம். அரை மணித்தியாலத்தின் பின் ஒரு இளம் பண்டா வந்தார். தன்னை கங்கா புத்திர பிராமணர் என அறிமுகம் செய்தார். பின்னர் தன்னுடைய பூசை உபகரணங்களை ஓரிடத்தில் வைத்து சீராக்கியபின் கங்கையிலே குளிக்கப் போவதாகக் கூறினார். நாமும் அவரின் அநுமதி பெற்று நீராடச் சென்றோம். கடவுள்தான் இவரைத் துணைக்கு அனுப்பினாரோ என்று வியந்தோம். எங்களுக்கு கங்கை நதியின் ஆழம், வேகம், நீராட ஏற்ற இடம் எதுவுமே தெரியாது. எம்மோடு அருகில் நீராடி மந்திரங்களை ஜபித்தார். எம்மையும் திருப்பிக் கூறுமாறு கூறினார். அவர் அதிகாலையில் இதயபூர்வமாக ஆறுதலாகச் சொன்னது சலனமுற்ற எமக்கு அமைதியைக் கொடுத்தது. நாம் இருவரும் கை கோர்த்துக்கொண்டு தண்ணீரில் மூழ்கி மூழ்கி இருந்தும் எழுந்தும் நீராடினோம். பக்கத்திலே பிரேதங்களைக் கழுவியும் அருகில் எரித்துக்கொண்டும் இருந்தனர். எவ்வித அருவருப்பும் பீதியும் தோன்றவில்லை. இதுதான் காசி என்னும் ஜோதியின் இரகசியம் போலும்! பின்னர் விஷ்ணு சாகரத்துக்கு கூட்டிச்சென்று அங்கும் எம்மோடு நீராடினார். இச்சாகரம் நிரம்பி குளத்தைக் காணமுடியாமல் இருந்தது. மீண்டும் மணிகர்ணிகா சென்று சுலோகங்களை ஓதியபடி எம்மையும் சொல்லவைத்து எம்மை நீரிலிருந்து வெளியே வரும்படி கூறினார். நாம் கை கோர்த்தபடி மூன்றுவரை எண்ணிபடி ஒன்றாகவே எழுந்தோம். என்ன அதிசயம்? என் உடல் லேசாகி மேலே மேலே செல்வதுபோல இருந்தது. இதை மனைவியாரிடம் கூற, அவரும் அதே அநுபவம் பெற்றதாகக் கூறினார். பின் அதே பண்டாவுடன் கங்கைக் கரையில் சங்கற்பம் செய்தோம். கங்கை நீரைச் செம்பில் எடுத்துக்கொண்டு கரையிலிருந்த தாரகேசுவரர் கோயில், மேலேயுள்ள துர்க்கா கோயில்களைத் தரிசித்து காசி விசுவநாதரிடம் சென்றோம்.

மணிகர்ணிகாவிலிருந்து கோயில் செல்லும் பாதை மிகவும் குறுகியது. வளைந்து வளைந்து சந்து பல கடந்து ஆங்கு நிற்கும் மாடுகளைத் தவிர்த்து இருமருங்கும் இருக்கும் கடைக்காரர்களின் கூச்சலுக்கு ஈடு கொடுத்து நடந்து செல்லவேண்டும். ஏழ்மையின் நிலையை இங்கு நன்றாகவே காணலாம்.

இறைவன் ஏழைகளின் இதயத்திலேதான் இருக்கிறான் என்பதை உணர்த்துவதுபோல இக்காட்சி இருந்தது.

**டுண்டி கணபதி:**

செல்லும் வழியில் இந்தக் கணபதியை வணங்காமல்-பார்க்காமல் செல்லமுடியாது. இந்தியாவில் ஆன்மிகவாதிகளால் அதிசக்தி வாய்ந்த முதல் தரமான பிள்ளையாராக இவர் கருதப்படுகிறார். சிறு மாடத்தில் செந்தூரம் பூசியவராய் இடது காலை மடித்து வலதுகாலை குத்திட்டு பெரிய தலையும் சிறிய

வலஞ்சுழி துதிக்கையும் கொண்டுள்ளார். நான்கு கைகள் கொண்டு எம்மை மட்டும் நேரே பார்த்து அருளுவதுபோல தோன்றுகிறார். ஆவணி சதுர்த்தியன்று இவரைக் கண்டு தரிசித்தது பெரும் பேறாகும்.

**காசி விஸ்வநாதர் கோயில்:**

பெரிதன்றோ! ஜோதி லிங்கமான அரனைத் தொட்டு கங்கை நீர், பால் என்பவற்றால் அபிஷேகம் செய்து, பத்திரம் புஷ்பம் என்பவற்றால் அர்ச்சித்தோம். சிறு கணந்தான் செய்யமுடியும். வரிசையில் நிற்பவர்கள் தள்ளிக்கொண்டே இருப்பார்கள். பண்டாக்களும் அதட்டுவார்கள்.




டுண்டி கணபதியை வழிபட்டபின் தொடர்ந்து நடந்து வழியில் ஒரு சிறுகுடம் பாலும் பூவும் பத்திரமும் வாங்கினோம். கோயிலைச் சமீபித்தபோது போவோரும் வருவோருமாக ஒரே மக்கள் கூட்டம். காவற்துறை அதிகாரிகள் மக்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு இருந் தார்கள். கிழக்கு முகமாக தங்கக் கூரை அமைந்த சி ய கோயில். பத்து சதுர அடி கொண்ட கருவ றை - நாலு பக்கமும் திறந்த வாயில் - காசி விஸ்வநாதர் தன்னையே அடக்கிக்கொண்டு ஒரு மூலையில் இரண்டு சதுரஅடி கொண்ட வெள்ளித் தகடால் வேய்ந்த தொட்டியில் கீழே சிறு மரகத லிங்கமாய் வீற்றிருக்கிறார். மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி

**'ஆக்கையாற் பயன் என் அரன்கோயில் வலம் வந்து**
**பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத**
**ஆக்கையாற் பயன் என்'**

என்ற திருநாவுக்கரசரின் தேவாரத்தை நினைவு கூர்ந்து அரனை வலம் வந்தோம். பின்னும் ஆசை தீரும்வரை திரும்பித் திரும்பி வரிசையில் நின்று தரிசித்தோம்.

திரும்பி வரும்போது மதிய நேரம் இருக்கும். அசதியால் ரிக்ஷாவில் கண்ணயர்ந்துவிட்டோம். முன்னேற்பாட்டின்படி ஒரு தமிழ் பிராமணர் வீட்டுக்கு போசனத்துக்குச் சென்றோம்.

இருபத்தைந்து ரூபாய்தான். பெற்ற அநுபவமோ பெரியது. சாதம், காய்கறிவகை, ரசம், மோர், ஊறுகாய் என்று பல்சுவை உணவை ஒரு கை பார்த்தோம். ஆவணி சதுர்த்தி என்றதால் மோதகம் வடை என்பன 'போனஸ்'

அங்கிருந்த பெரிய (முதிர்ந்த) அந்தணர் எமக்கு உணவளித்த தம்பதியை அழைத்து 'ஆசீர்வாதம்' வாங்குங்கள் என்று சொன்னார். உடனே அவர்கள் இருவரும் அவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி ஆசி பெற்றனர். இதைக் கண்ணுற்ற போது காசியிலும் எமது பண்பாடு, கலாசாரம் பேணப்படுகிறது என உவகை கொண்ட அதேசமயம் எம்மிடை தற்போது பெரியோரைக் கனம் பண்ணும் பழக்கம் அருகி வருகிறது என எண்ணி விசனப்பட்டோம்.

## சப்தரிஷி பூசை:

சப்த - ஏழு. ஏழு பண்டாக்கள் மரபு தவறாமல் எட்டு மணிக்குச் செய்யும் பூசை இதுவாகும். நாங்கள் சென்றபோது ஒரே மக்கள் கூட்டம். அநுமதிச் சீட்டு எடுத்துத்தான் பார்க்கமுடியும். ஏழரை மணிக்கே தரிசிக்க வருவோரை வரிசையில் நிற்பாட்டினர். பாலாலும் நீராலும் நிரம்பிய தொட்டியை குழாய் கொண்டு உறிஞ்சி சுத்தப்படுத்தினர். அரனை அப்போது பார்த்து 'சிவசிவா! இவ்வளவு சிறிய லிங்கமா விஸ்வநாதர்?' என்று மலைத்தேன். பின்னர் ஏழு அந்தணர் வந்தனர். இவர்களுக்கு இருக்க இடம் இல்லை. ஆதலால் எழும்பி இடம் கொடுக்கவேண்டியதாயிற்று. பின்னர் ஒன்றையும் நான் பார்க்க முடியவில்லை. அரனின் அருளோ என்னவோ, டிக்கட் கொடுத்தவர் என்னைக் கூட்டிச்சென்று மிகமிக சமீபமாக இருத்தினார். அச் சிறு கருவறையில் நடக்கும் பூசையைப் பார்க்க பத்திபரவசமாக இருக்கும். டமருகம் என்ற உடுக்கை அடிக்க, மணியோசை கேட்க, பால், தயிர், பஞ்சாமிர்தம், தேன், நெய், சந்தனம், பன்னீர் என்பவற்றால் அபிஷேகம் பத்தியோடும் பவ்வயமாகவும் நடைபெற்றது. பலவித வண்ணங்களிலும் அளவுகளிலும் மாலைகள் அணிவித்தனர். ஐந்துதலை நாகமுடியை வைத்தனர். டமருக ஓசை, மேள ஒலி, மணி ஒலி, வேதகோஷம் என்பன அதிகரிக்க அதிகரிக்க தூப தீப ஆரத்தியைப் பார்க்கும்போது எம்மை அறியாமலே மயிர்க்கூச்செறிந்து பத்தி பரவச நிலை ஏற்படும்.

## பஞ்சகங்கா - பிந்துமாதவர்:

அடுத்த நாள் படகொன்றை ஸ்ரீநிவாச ஐயரின் துணைகொண்டு அமர்த்தி கங்கையிற் சென்றோம். காசியில் 64 காட் அல்லது துறைகள் உண்டு. செல்லும்போது அவர் அசிகாட் (முக்கியமானது) முதல் அநுமான் காட் வரை காட்டி விவரித்தார். அசிகாட் டில்தான் காசி விஸ்வநாதர் இருக்கிறார். பின்னர் பஞ்சகங்கா என்னும் தீர்த்தத் துறையை அடைந்து படகை நிறுத்தினார். படகிலிருந்து இறங்கி நீராடினார். நாமும் சேர்ந்து நீரா டினோம். சிநேகிதரான இவரும் வேத சுலோகங்களை ஓதினார். பஞ்ச கங்காவில் ஐந்து நதிகள் சங்கமமாகின்றன என்று ஐதிகம். பஞ்சகங்கா படித்துறைக்கு அருகில் இருக்கும் பிந்துமாதவர் கோயிலுக்குச் சென்றோம். பிந்து - துளி, மாதவர் - விஷ்ணு. சலவைக்கல்லாற் கட்டிய கட்டடமும் தொங்கும் கண்ணாடி விளக்குகளும் உடைய கோயில் இது. இங்கு அர்ச்சனை செய்தோம். தமிழ் சிவாசாரியர்தான் இருந்தார். அவர் ஸ்ரீநிவாச ஐயரின் நண்பர். வெயில் என்பதால் ஒரு புட்டி நீர் தந்து எம்முடைய தாகத்தையும் தீர்த்தார். இராமேஸ்வரத்திலும் சேதுமாதவர் இருப்பதை நினைவு கூர்ந்தோம்.



**காலபைரவர்:**

காசியில் இயம பயம் கிடையாது. ஆனால் வயிரவர் பயம் உண்டு. யாவரும் காலபைரவரை தரிசித்தே விடைபெறவேண்டும். காக்கும் கடவுளான இவர் விசுவநாதர் கோயிலிலிருந்து ஒரு மைல் தொலைவில் இருக்கிறார். எம்மைக் கண்டவுடன் அர்ச்சகர் உரத்த குரலில் காலபைரவாஷ்டகத்தை உச்சாடனம் செய்தார். பின் தூப, தீப, கர்ப்பூர ஆரத்தி காட்டி பைரவரின் திருப்பாதங்கள், திருக்கரங்கள், சூலம், உடுக்கை, பாசக்கயிறு, தண்டம் ஆகியவற்றைக் காணவைத்தார். பின்னர் முதுகிலே எதிர்பாராத சமயம் அடித்தார். மந்திரம் ஓதி கையிலே நூலும் கட்டுவார். வலம் வரும்போதும் மயிர்ப்பீலியால் அடித்தார். ஆனால் இது முன்னர் அடித்ததை விட வலி குறைவாக இருந்தது.

**தண்டபாணி கோயில்:**

காலபைரவர் கோயிலுக்கு மிகச் சமீபத்தில் இக்கோயில் இருக்கிறது. தண்டபாணி நீதி கூறும் கடவுளாகும். பிழை செய்தால் தண்டத்தால் (தடியால்) அடிப்பாராம்.நாம் சென்ற சமயம் இவருக்கு அபிஷேகம் செய்து அலங்கரித்து பூசையும் நடந்தது.

**கௌடி (சோழி) மாதா:**

காசியை விட்டு விடைபெறும்போது யாவரும் இக்கோயிலுக்குப் போகவேண்டும். நாம் இதற்கு முன் இருந்த துர்க்கை அம்பாளைத் தரிசித்தபின் சென்றோம். சிறு கோயில்தான். சோழியை பணம் கொடுத்து வாங்கி, மாதாவை வணங்கி,

**'காசி பலம் ஹம்கோ**
**கௌடி பயம் தும்கோ'**

என்று கூறி மாதாவின் முன் எறியவேண்டும். 'காசி புண்ணியம் நமக்கு, சோழியின் பயன் உனக்கு' என்பது இதன் பொருள்.

'விச்வேசம் மாதவம் டுண்டிம்
தண்டபாணிம்ச பைரவம்
வந்தே காசிம் குஹாம் கங்காம்
பவானீம் மணிகர்ணிகாம்'

காசியில் பல கோயில்கள் உள. ஆனால் முக்கியமானவை விஸ்வநாதர் கோயில், பிந்துமாதவர் கோயில், டுண்டி கணபதி கோயில், தண்டபாணி கோயில், காலபைரவர் கோயில், கௌடி மாதா கோயில், அன்னபூரணி கோயில், கங்கை ஆதியன.

காசிக்குச் செல்ல முதுமை வேண்டும் என்று கருத்து பலரிடம் உண்டு. பாரதியார் இளமையிற் காசி சென்று கற்று மனதுருகி கங்கையிலே தனது பூணூலையும் அறுத்து புரட்சி செய்தார். பிற நாட்டவரும், ஏன் இந்தியரும் இளவயதிலேயே வருகின்றனர். வயதைப் பார்த்தால் வசதியிருந்தும் போகாவிட்டால், கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் என்றாகிவிடும்.

காசிக்குப் போகவேண்டியது சந்யாசி அல்ல! சம்சாரி!!



**முத்தித் தலங்கள் தொடரின் பின்னுரை:**

முத்தித் தலங்கள் ஏழு. இதில் காசி, காஞ்சி. அவந்திகா (உஜ்ஜயினி) ஆகிய மூன்றும் சிவன் கோயில்கள். துவாரகா, அயோத்தி, மதுரா மூன்றும் விஷ்ணு தலங்கள். ஒன்று மட்டும் - ஹரித்துவார் - கங்கை நதிக்குரிய கோயிலாகும். துவாரகா நதியும் சமுத்திரமும் சங்கமமாகும் இடத்தில் உள்ளது. ஏனைய கோயில்கள் நதியோடு உள்ளன. காஞ்சியில் இருக்கும் சிவலிங்கம் ஜோதிர்லிங்கமல்ல. தமிழ் நாட்டில் இராமேசுவரத்தில் மட்டும்

ஜோதிர்லிங்கம் இருப்பது குறிப்பிடத்தக்கது. சைவ சித்தாந்த தத்துவப்படி மனிதப் பிறவியின் பயனும் முக்கிய நோக்கமுமாக இருப்பது முத்தி - வீடுபேறு அடைவதாகும். அறம், பொருள், இன்பம், வீடு என நான்கில் முடிவாக இருப்பது வீடுபேறாகும். முத்தி நிலை நான் என்ற ஆணவம் அடங்கி, மனம் அற்று, செயல் அற்று, வினையற்று இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலையாகும்.

இந்த வீடுபேற்று முத்திநிலையை நாம் அடைவோமா? அது யாருக்கும் தெரியாத புதிர். எனினும் இந்த முத்தித் தலங்களில் தலையான தான காசியையாவது தரிசித்தால் ஒருவித நிம்மதி பிறக்கும். காசிக்குச் செல்ல முடியாதவர்கள் எளிதாக அடையக்கூடிய காஞ்சிபுரம் சென்றாலே போதும்! மன அமைதியும் நிம்மதியும் பெறலாம்.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

****

## முதுமையிலேதான் காசிக்குப் போகவேண்டுமா?

நன்றாக இயங்கும் உடல் உறுப்புக்கள் தெளிவான மனநிலை கொண்ட சுகாதாரமான தருணத்தில் காசிக்குச் செல்வது சிறப்பு. அங்கு நடைமுறைப் படுத்தவேண்டிய சடங்குகளைக் குறைவில்லாமல் செய்வதற்கு உடல் ஆரோக்கியம் தேவை.

காது மந்தம், கண்பார்வை குன்றிவிட்டது, ஊன்றுகோல் இல்லாமற் செல்ல இயலாது... அவ்வப்போது மறதி தென்படுகிறது... - இந்த நிலையிற் காசிக்குப் போனால் செய்யும் சடங்கு நாடகமாக இருக்கும். பலன் இருக்காது. வயதான பிறகே காசிக்குச் செல்லவேண்டும் என்று தர்மசாஸ்திரம் சொல்லாது.

"இளமையில் வேள்வியில் ஈடுபடு" *(ஜாதபுத்ர: கிருஷ்ண கேசி அக்னீனாததீ)* என்று சாஸ்திரம் அறிவுறுத்தும். தகப்பன் துரதிஷ்டவசமாக சிறு வயதிலேயே இறந்துவிட்டால், அவன் மகன் சிறுவனானாலும் சடங்கைச் செய்யவைக்கும் தர்மசாஸ்திரம், புதல்வன் குடும்ப பாரத்தை ஏற்கும் தகுதியை அடைந்தபிறகு நிம்மதியாகக் காசிக்குப் போவோம் என்று தகப்பனார் எண்ணுவார். அப்போது அவருக்கு வயதாகி இருக்கலாம். அதை வைத்து வயதானபிறகே காசிக்குப் போகவேண்டும் என்று ஒரு கட்டளையை தர்மசாஸ்திரத்தில் இடைச்சொருகலாக திணிக்காதீர்கள். இளம் வயதில் காசிக்குப் போவது சிறப்பு. ஈடுபாட்டுடன் சடங்கில் ஈடுபட முதுமையைவிட இளமையே சிறந்தது.

அதுபோல, தாய் தந்தையரை இழந்தவர் மட்டுமே காசிக்குப் போகவேண்டும் என்பதும் இல்லை. பெற்றோரை இழந்தவர்களுக்கு கங்கைக் கரையில் தன் முன்னோருக்கு ஆராதனம் செய்யும் வாய்ப்புக் கிடைக்கும். பெற்றோர் இருப்பவர்களும் கங்கையில் நீராடித் தூய்மை பெற்று, ஈசனை வணங்கி அருள்பெறலாம்.

காசி என்பது புண்ணிய க்ஷேத்திரம். அங்கு எல்லோரும் சென்று வணங்கலாம். அங்கு முன்னோருக்கு ஆராதனை செய்வது தனிச்சிறப்பு. இளம் வயதிலே நோய் நொடிகளைச் சந்திப்பவர்கள் தற்போது அதிகம். அதை அகற்ற. கங்கா ஸ்நானம் பயன்படலாம். நம் முன்னோர்கள், காசியில் உயிர் துறப்பதற்காக அங்கே தங்குவதுண்டு. அங்கு உயிர் துறந்தால் ஈசன் நம் காதில் தாரக மந்திரம் ஓதி மோட்சம் அளிப்பார்.

போக்குவரத்தும் பொருளாதாரமும் செழிப்பும் உள்ள தற்போது காசிக்குச் சென்று வருவது சிரமம் இல்லை. சந்தர்ப்பம் வாய்க்கும்போது பயன்படுத்திப் பலன் அடையலாம். உடம்பில் காற்று இருக்கும்போதே செய்துவிடவேண்டும். நமது முடிவு நம் கையில் இல்லை. இளமையிலேயே காசிக்குச் சென்று பயன் பெறுங்கள். அதில் தவறு இல்லை.

**- சேஷாத்ரிநாத சாஸ்திரிகள் நன்றி: சக்தி விகடன்**

# திருக்கயிலாயக் கோலத்தை இறைவர் திருவையாற்றில் காட்டிய அற்புதம்

இடைக்காடு சயம்பு (இலண்டன்)



திருநாவுக்கரசு நாயனார் தமது புனித யாத்திரையில் திருக்காளத்தி வந்து சேர்ந்தார். அங்கு முறையாக இறைவரை காளத்தி நாதரை வணங்கிப் பதிகங்களும் பாடி, கண்ணப்ப நாயனாரையும் வீழ்ந்து வணங்கினார். உளவாரத் திருப்பணியுஞ் செய்தார். திருக்காளத்தி மலையும் கோயிலும் தென்கயிலாயமென்று விளக்கமாய் அறியப்படும். இதனால் அவருக்கு வடகயிலை ஞாபகம் வந்தது. திருக்கயிலைக்கு யாத்திரை போய்க் கயிலாய பதியின் கோலத்தைக் காண ஆசைப்பட்டார். 'கயிலைமலை வீற்றிருந்த பெருங்கோலங் காணுமது காதலித்தார், கலை வாய்மைக் காவலனார்.' சேக்கிழார் பாடலின் கடைசி அடியை முற்று மோனையாக அமைத்துப்பாடினார். 'காணுமது காதலித்தார் கலைவாய்மைக் காலவனார்' அடிகளுடைய ஆசை முற்றும்-நிறைவேறும் என்ற குறிப்புப் பட அமைத்துப் பாடினார். நாயனார் பின்னர் 'கயிலை மலை வீற்றிருந்த சிறப்பு. 'க'-கயிலையின் குறிப்பில் சேக்கிழார் 'க'கர முற்று மோனை அமைத்தார். அவரது வாக்கின் ஆசீர்வாதத்தால் திருக்கயிலாய யாத்திரை இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. பத்தர்கள் கயிலை அடிவாரத்தைச் சுற்றி வழிபட்டு வருகின்றார்கள்.

நாயனார் ஆசைப்பட்டார்; கிளம்பிவிட்டார். திருப்பருப்பதத்தை வழிபட்டார். காசி விசுவநாதர் விசாலாட்சியையும் வழிபட்டு மேலே மேலே மலைச்சாரலில் யாத்திரையைத் தொடர்ந்தார். காடும் கற்களும் நிறைந்து கற்சுரம் பகலில் கடும் வெப்பம். இரவில் கடுங்குளிர். தனித்து வழிநடந்தார். பாலை நிலம் போலிருந்தது மலைச்சாரல். உணவின்றி நடந்தார். இலை சருகு காய் கனி யாவது உண்ணாமல் ஒரே சிந்தனையாக நடந்தார். பாறை வெடிப்புகள் கால்களைத் தேய்க்க கைகளை ஊன்றி உந்தி உந்திச் சென்றார். கொஞ்சம் கொஞ்சமாய் ஏறினார். கைகளும் தேய்ந்தன. பின் மார்பினால் உந்தி ஏறினார். இந்த அங்கங்களும் தேய்ந்தொழியப் புரண்டு புரண்டு ஏற முயன்றார். தலைதவிர உடல் முழுவதும் தோல் அழிந்து தசைகளும் தேய்ந்து நரம்புகளும் அறுந்து உடல் எவ்வழியும் இயங்காத நிலையில் செயலின்றித் தங்கினார். வலியோ வருத்தமோ தெரியவில்லை. மனந்தளரவில்லை. ஆனால் உடலியங்கவில்லை. சிறிது சோர்ந்து படுத்துவிட்டார். இவ்வேளை கயிலாய நாதர் ஒரு முனிவர் வடிவோடு தோன்றி, இரக்கமாய் நோக்கி 'பெரியவரே, இப்படி

உடலழியும் படி நீரிங்கு வந்த காரணமென்ன?' என்று வினவினார். நாயனார் பதில் கூறினார். 'மலை மகளுடன் வட கயிலை அண்டர் நாயகர் இருக்கும் பரிசு, அவரடியேன் கண்டு கும்பிட விருப்பொடுங் காதலினடைந்தேன்.' முனிவர் பரிவுடன் பார்க்கவும், நாயனாரும் உணர்ச்சி வந்து அவரைப் பார்க்கக் கூடியதாயிருந்தது. முனிவர் பேசவும் இவருக்கும் பதில் கூறக்கூடிய பலம் வந்தது. உடனே முனிவர் ஆச்சரியப்பட்டவர் போல், 'என்ன! கயிலாயத்தைப் பார்க்கவா? அங்கு மனிதர் போக முடியாதே! தேவச் சாதியாரும் பலர் அங்கு போக முடியாது. இனி நீர் திரும்பிப் போவதே புத்தி' என்றார். நாயனார் கூறினார்.

**'ஆளும் நாயகன் கயிலையி லிருக்கை கண்டல்லால்**
**மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'**

நாயனாரின் இந்த உறுதியான பதிலுடன் முனிவர் மறைந்தார். அசரீரி பேசிற்று. 'ஓங்கு நாவுக்கரசனே எழுந்திரு' என்று ஆணை கேட்டது. அப்பொழுதே நாயனாரும் காயங்கள் வடுக்கள் நிணம் நீங்கிய சுத்தமான ஒளியுடைய உடலுடன் தோன்றி எழுந்து நின்று,

**அண்ண லேயெனை யாண்டுகொண் டருளிய வமுதே**
**விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே**
**கண்ணி னாற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்**
**நண்ணி நான்றொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.**

இறைவரும் பதிலருளினார். 'இதோ இருக்குமிப் பொய்கையில் முழுகித் திருவையாற்றில் தோன்றுவாய். அங்கு நீ விரும்பிய கோலத்தைக் காண்பாயாக.' நாயனாரும் உச்சி மேற் கை குவித்து வீழ்ந்து வணங்கிப் 'போற்றித் திருத்தாண்டகம்' ஒருபதிகம் பாடினார். (வேற்றாகி விண்ணாகி) பின் திருவைந்தெழுத்தை ஆர்வமாக ஓதி மூழ்கினார்.

**'மாதொர் பாகனார் மகிழுமை யாற்றினோர் வாவி**
**மீது தோன்றிவர் தொழுந்தனார் உலகெலாம் வியப்ப'**

வாவியில் தோன்றி எழுந்த நாயனார், இப்போ புதிய கோணத்தில் உயிரினங்களைக் காண்கிறார். முன்னர் உயிரினங்கள் வாழ்வதை அவதானித்தவர் தானே. இப்போது அசையும் உயிரினங்கள் அசையாத உயிரினங்கள் எல்லாம் தத்தமது துணையொடும் பொலிவதைக் கண்டார். சத்தி சிவமாந் தத்துவம் தெரிந்தது. உயிரினங்கள் போகம் அனுபவிப்பதை உணர்ந்தார். காத்தல் தொழில் நடக்கிறது. நடந்து வந்து திருவையாறு கோயிலை அண்மித்தார். அற்புதம்! கோயில் கயிலாய மலையாய் உருமாறிப் பெரிதாய் நின்றது. பெருந்தேவர்களும் முனிவர்களும் சிவகணங்களும் தேவச் சாதியாரெல்லாம் சிவன் பார்வதி தரிசனத்துக்காகக் காத்து நிற்கும் வேளை அவர்கள் பாடிப்பரவும் ஓசையும் இயங்களின் ஒலியும், வேதங்கள். தாமே ஓதும் ஒலியும் ஒரு பேரரசின் மாளிகையில் நடப்பவை போல் எல்லா நிகழ்ச்சிகளும் நடப்பதைக் கண்டார்; கேட்டார். மால் விடை நிற்பதைக் கண்டார். நந்தி தேவர் கூட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டு நடந்து திரிவதையுங் கண்டார். பின்னர் நிறைந்த பேரானந்த அற்புதத்தைக் கண்டார்.

**வெள்ளி வெற்பின்மேன் மரகதக் கொடியுடன் விளங்குந்**
**தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனவிடப் பாகங்**
**கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த**
**வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின் மன்னவனார்.**

இந்தப் பாடலில் வெள்ளி வெற்பு என்றது இடப தேவரையும் மரகதக் கொடி உமாதேவி யாரையும் பவளவெற்பு சிவபெருமானையும் குறிக்கின்றன. இடபரூடராய் பார்வதி சமேதராய் நிற்கும் இறைவரின் கோலத்தைக் கண்டார். 'திருக்கயிலையிலிருந்த நின்கோலம், நண்ணிநான்தொழ நயந்தருள்புரி' என வரங் கேட்டாரல்லவா நாயனார்? அதற்கேற்ப கயிலையின் அருளாட்சிக் கோல மெல்லாங்காட்டி முத்திக் காட்சியையுங் காட்டினார். முத்தி பின்னால் நிகழ்வதனாலும் இப்போதே அதையுங் காட்டினார். நாயனார் சிவானந்தத்தை உணர்ந்தார்.

**கண்ட வானந்தக் கடலினைக் கண்களான் முகந்து**
**கொண்டு கைகுவித் ததெதிர் விழுந் தெழுந்துமெய் குலைய**
**அண்டர் முன்புநின் றாடினார் பாடினார் அழுதார்.**
**தொண்ட னார்க்கங்கு நிகழ்ந்தன யார்சொல வல்லார்.**

நாயனார் இக்காட்சிகளைக் கண்டு கொண்டு பரவசமாய்ப் பேரானந்தத்தில் திளைத்து ஏராளமான பாடல்களைப் பாடினார். திருக்கயிலைப் போற்றித் திருத்தாண்டகங்கள் இரண்டு பதிகங்கள்- சிறப்பானவை. இங்கு பாடிய போற்றித் திருத்தாண்டகங்கள் இறைவரை நேரே கண்டு பாடியவை. கயிலை மலைச்சாரலில் முன்பாடிய பதிகம் அசரீரி கேட்டு பாடியவை. அருவத் திருமேனியை நினைந்து பாடியது. திருக்கயிலாயம் மேற்பாடப்பட்ட மூன்று பதிகங்களிலும் ஒவ்வொரு பாடல் முடிவிலும் கயிலை மலையானே போற்றி போற்றி என்று போற்றினார் நாயனார். இவை பூசைக்கு ஏற்ற பாடல்கள். மனனமில்லாவிட்டாலும் ஒருவர் வாசிக்க ஒருவர் பூப்போட்டுக் கொண்டிருக்கலாம். சிவயோக சுவாமிகளுக்குத் திருவாசகத்தில் சிவபுராணம் மிகவும் பிடிக்கும். அதிலே ஒரு அடியையாவது பாடுங்கள் என்று சொல்வார். அவருடைய குருபூசைத் தினங்களில் சிவபுராணம் ஓதிப பூப்போட்டு அருச்சனை செய்யப்படுகிறது. கொழும்பில் சரஸ்வதி மண்டபத்தில் திருவடிப்பூசை மிகவும் பத்திபூர்வமாய் விமரிசையாக நடக்கும். அதுபோல இந்தத் திருத்தாண்டகப் பாடல்களும் பூசைக்கு மிகவும் சிறப்பானவை. நாயனார் பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் பார்வை காட்சியை விட்டுவிலகாமலும் நின்றார். அப்பொழுது........

**ஆயவாறுமற் றவர் மனங் களிப்புறக் கயிலை**
**மேய நாதர்தந் துணையொடும் வீற்றிருந் தருளித்**
**தூய தொண்டனார் தொழுதெதிர் நிற்க வக்கோலம்**
**சேய தாக்கினார் திருவையா றமர்ந்தமை திகழ.**

நாயனார் அவ்வண்ணம் நிற்கவும் இறைவர் கயிலைக் காட்சியைச் சிறிது சிறிதாகத் தூரத்தில் காட்டிப் பார்வையைக் குறைத்துப் பின் மறைத்து ஐயாறு கோயில் இருக்கும் கோலத்தை நாயனார் காணும்படி செய்தார். நாயனார் மகிழ்ந்தும் வருந்தியும் இறைவரருள் இதுவெனத் தெளிந்தார். பின்னர் உயிரினங்கள் வாழ்க்கை நடத்தும் விதத்தைத் தாம் கண்ட வண்ணம் பாடினார். பல பிராணிகளையும் பாடினார். (பதிகம் 3)

**மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான்மக ளொடும்பாடி**
**போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்.**
**யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது**
**காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்**
**கண்டேன் அவர்திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

கயிலாய மலைச் சாரலில் ஏற்பட்ட ஊனமொன்றுமின்றி திருவையாற்றின் குளத்தினின்றும் எழுந்தேன். நான் காணும் மிருகங்கள் பறவைகள் முதலியன எல்லாம் ஆணும் பெண்ணுமாய்க் கூடி வாழ்க்கையிலீடுபடுபதைக் கண்டேன். அது சிவனும் சக்தியுமாகிய தத்துவம் என்பதை உணர்ந்தேன். உணரவும் இறைவர் திருப்பாதங்களைக் கண்டேன். சிவானந்தத்தை யுணர்கிறேன். அநுபவிக்கிறேன். நான் குளத்தினின்றும் கோயிலை நோக்கி வரும்போது இறைவர் பிறைச் சந்திரனைக் கண்ணிபோலச் சடைமுடியில் தரித்த முறையும் அம்மையுடன் சேர்ந்து இருக்கும் காட்சியையுங் கண்டு கொண்டு அருச்சனைக்கு வரும் அடியவர்கள் பின்னே வந்து கொண்டிருந்தேன். நாயனார் எல்லாப் பாடல்களிலும் பிறையையும் அம்மையையும் குறித்துப் போற்றுகிறார். இதுபோல் கோயில் திருநேரிசைப் பதிகத்திலும் (22) பத்துப்பாடல்களிலும் பிறையைக் குறித்துப் போற்றியிருக்கிறார். இறைவரின் தடத்த உருவம் நாயனாரை மிகவும் ஈர்த்தது, இளநிலாவின் ஞானஒளியும் அதை இறைவர் சடாமுடியில் பொருத்தமாக அணிந்த அழகும் ஆகும். இளம்பிறையின் காட்சியில் இறைவரின் கருணையைக் கண்டார். நாயனார் பிறை சூடியாகக் கண்ட மூர்த்தம்-'சந்திர சேகரர்' கோயில்- உள்வீதியில் இருக்கிறது. நாயனார் திருவையாறு தலத்தில் பல யாப்புகளிலும் பண்களிலும்-பதினொரு(11) பதிகங்கள் பாடியிருக்கிறார். நாமும் அவற்றைப் பாடி உய்வோமாக.

********

# கந்தஷஷ்டி விரதம்

ஐப்பசி மாதம் அமாவாசைக்கு அடுத்த பிரதமை முதல், ஷஷ்டி ஈறாகிய ஆறு நாள்களும் அநுட்டிக்கும் விரதம் இதுவாகும். ஒவ்வொரு நாளும் காலையில் நீராடி, முருகப்பெருமானை வழிபட்டு, சிறிதளவு நீர் மட்டும் அருந்தி உபவாசம் ஆறு நாள்களும் இருந்து, ஏழாம் நாள் சிவனடியார்களுடன் பாரணை செய்வது இவ்விரதத்துக்கு நியமம் ஆகும். இதற்கு இயலாதவர், முதல் ஐந்து நாளும் ஒரு பொழுது உண்டு ஷஷ்டியில் உபவாசம் செய்யக்கடவர். இவ் விரதம் ஆறு ஆண்டுகள் அநுட்டித்தல் வேண்டும்.

பிரதமையில் சிவபெருமானுடைய நெற்றியிலிருந்து தெறித்த பொறிகள் ஆறும் சரவணப் பொய்கையில் ஆறுருவாக. அதனை உமாதேவியார் எடுக்க. ஆறு திருமுகமும் பன்னிரு திருக்கையுமுடய ஓருருவாய் எழுந்தருளினார். சூரபதுமனை முருகன் சங்காரம் செய்த நாள் இதுவேயாம்.



கந்தபுராண உபதேச காண்டத்தில் இவ்விரதம் பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தேவர்கள் இவ்விரதத்தை நோற்றுப் பயன் பெற்றதாகவும் இந்நூல் கூறும்.

**மறைகளின் முடிவால் வாக்கால்**
**மனத்தினால் அளக்கொ ணாமல்**
**நிறைவுடன் யாண்டு மாகி**
**நின்றிடும் நிமல மூர்த்தி**
**அறுமுக உருவாய்த் தோன்றி**
**அருளோடு சரவ ணத்தில்**
**வெறிகமழ் கமலப் போதில்**
**வீற்றிருந் தருளினானே**

# Hinduism in search of answers...

## HINDU SCRIPTURES (contd)

## UPAVEDAS

These are subsidiary to Vedas, mainly of secular subjects – sciences not connected with Veda study.

### AYURVEDA – Science of Health



Cataract surgery was known to the Vedic physician Sushruta in the first millennium BC and was performed with a special tool called the jabamukhi salaka, a curved needle used to loosen the lens and push the cataract out of the field of vision. The eye would later be soaked with warm butter and then bandaged.

According to Ayurveda, Terminalia arjuna (Marutha Maram) is useful in alleviating the pain of angina pectoris and in treating heart failure and coronary artery disease. T. arjuna may also be useful in treating hypercholesterolemia.



Marutham tree was identified as the symbol of Marutham land.

DHANURVEDA – Science of Archery / war

The urumi, a flexible blade that behaves like a whip, is unique to Dravidian martial arts.



GANDHARVA VEDA
(an appendix to Sama Veda) – Science of Music and dance
ARTHA SASHTRA – Science of Polity.
STHAPATYA VEDA – Science of Architecture

***S.Atpu***


Sri
Valli's
ஸ்ரீ வள்ளிஸ்
Fresh Flowers
Fashion Jewellery
இறைவனுக்கு சாத்தும்
மாலை தொடக்கம்
அனைத்து மாலை வகைகளும்
உடனுக்குடன் செய்து தரப்படும்
தினம் மலர்ந்த மதுரை மல்லிகை
இங்கு கிடைக்கும்.
East Ham: 78, Church Road, Manor Park, London, E12 6AF Tel: 020 8514 7777
East Ham: 345, High St. North, Manor Park, London E12 6PQ Tel: 020 8471 5011
Wembley: Unit 3, 29-33, Ealing Road, Wembley, Middx HA1 4YA. Tel: 020 8903 0888
Croydon: Unit 1, 219, London Road, Croydon, Surrey CR9 2RL Tel: 020 8665 7245
Web: vallisuk.com
Email: info@vallisuk.com

# - NAVARATHRI -

Navarathri is the festival to commemorate the victory of good over evil. It lasts or nine days in honour of the embodiment of c vine power of "Parasakthi" in its various manifestations, Thamasic as "Maha Kali", Rajasic as "Mahaluxumi" and Sathvic as Maha Saraswathy. In the first three days Goddess "Kali" also called as Durga is invoked. The next three days Goddess Lakshmi is worshipped and the following three days are dedicated to G ddess Saraswathi. The tent y is known a Vijaya Dasami", Day to co emorate the v dictory worship is done.

**Goddess Durga.**

Durga is described in The"Puranic" literatu as the "Terrible Power" that vanquished an was victorious over the "Demons" with bad virtues., who terrorised the devoted Religious seekers. The inner significance is that by worshipping Her for three days man merely invokes his own power,which is dormant within, to discover and destroy th egative forces lurking in his thought,word deed.

**Goddess Lakshmi**

Goddess Luxumi is the G dess of "Aiswaria". Aishwaria is not to be stood in the narrow sense of material w pos-sesions alone but it is inclu divine wealth of love, kindness, d n, patience, endurance, charity,ahimsa and the like. By the end of these three days,these divine qualities should replace the devilish tendencies which had enveloped in ourselves.

**Goddess Saraswathi**

The invocation of SaraswathY the Goddess of knowledge, is therefore the last and final stage in the spiritual evolution of man. Just as she brings out the music and melody from the well tuned "Veena", the musical instrument of Goddess Saraswathy.

**VIJAYA DASAMI**

After all the above mentioned three stages are gone through, on the Vijaya dasami day, the Personified Devil "Demon" is burnt down indicating the transendence of the ego, when man attains the great victory. The inner significance of the festival is to achieve victory of good over evil, demonic desires embodied in our own inner consciousness. They are "Kama" lust, "Krodha" anger "Lobha" greed, "Moha" attachment, "Mada" pride and "Matsarya" malice. The qualities reduce the man to the level of demon. They have to be destroyed, by the supreme grace of the divine of "Sakthy" "Maha Parasakthi".

**Navarathri.**

The Navarathri festival is celebrated to declare to the world the divine aspect of the "divi " mother and motherhood. The phy mental and spiritual powers are cor by Her. The festivals are only rem rs for the man to seek the almighty. The r significance is to establish the status of t mother at home, as the upholder of ideal ,virtues etc and therfore the teacher of the children. Every mother has the important responsiblity at home in the effort of the expansion and steady manifestation of the good consciosness , latent in every child. . The children have to be taught to respect their parents,teachers and elders, and to respect the law of the land they reside.

Let us pray to the divine mother "Sakthy" to help us to realise ourselves to heal our hearts and minds in the direction of unstinted service to achieve victory of good over evil virtues.

***S.Selvapaskaran.***

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**நவம்பர் (01-11-2010) தொடக்கம் ஜனவரி (15-01-2011) வரை**

| | | | |
|---|---|---|---|
| 05-11-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | புகழ்த்துணை நாயனார் |
| 06-11-2010 | சனி | கந்தஷஷ்டி விரதாரம்பம் | |
| 11-11-2010 | வியாழன் | கந்தஷஷ்டி விரதநிறைவு | |
| 12-11-2020 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | கோட்புலி நாயனார் |
| 19-11-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | பத்தராய்ப் பணிவார் |
| 22.11.2010 | திங்கள் | ஸ்ரீ விநாயகர் விரதாரம்பம் | |
| 26.11-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | அப்பாலும் அடிசார்ந்தார் |
| 03-12-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | பூசலார் நாயனார் |
| 10-12-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | மங்கையர்க்கரசியார் |
| 11-12-2010 | சனி | ஸ்ரீ விநாயகர் விரதநிறைவு | (பிள்ளையார் கதை) |
| 13.12.2010 | திங்கள் | திருவெம்பாவை ஆரம்பம் | |
| 17-12-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | நேச நாயனார் |
| 22.12.2010 | புதன் | திருவெம்பாவை நிறைவு | |
| 24-12-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | கோட்செங்கட்சோழர் |
| 31.12-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| 07-01-2011 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | சடையனார் நாயனார் |
| 14-01-2011 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | இசைஞானியார் நாயனார் |
| 14-01-2011 | வெள்ளி | தை மாதப்பிறப்பு - தைப்பொங்கல் | |

**ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.**

**தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ நடராசப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.**

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# Accident Courtesy

## வாகன விபத்தா?

**BRANCH**
13 Progress Business Park
Progres Way,
Croydon
Surrey CR0 4XD

**BRANCH**
142 Pinner Road,
Harrow
Middlesex, HA1 4JE

**HEAD OFFICE**
Beechfield House
Lyme Green Business Park
Winterton Way,
Macclesfield
Cheshire, SK11 0LP

**BRANCH**
Trocoll House Wakering Road
Barking, Essex, 1G11 0TJ

எம்மை நேரடியாகத் தொடர்பு கொள்பவர்களுக்கு எவ்வித கொமிஷனும் அறவிடப்படமாட்டாது. அதாவது 100% நஷ்டஈடு பெறுவீர்கள்



**Call us now**

**142, Pinner Road, Harrow HA1 4JE**
**Tel: 08002321523 / 020 8427 4060**
**Fax: 0845 8710197**
E-mail: info@accidentcourtesyltd.co.uk

"accident courtesy Ltd regulated by ministry of justice our Authorisation Number: CRM2523"

We don't charge any commission for whoever calls directly
This means they get 100% compensation


Accident Courtesy
வாகன விபத்தா?
மாற்று வாகனம் தேவையா?
நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டுமா?
உங்களது விபத்து எவ்வாறு நடந்தது என்பதை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கவேண்டுமா?
உங்களுக்கு பிடித்த வாகன உற்பத்தியாளர்களிடமே வாகனத்தை திருத்தவேண்டுமா,
உங்களுக்கு ஏற்பட்ட வீண் செலவீனங்களை, மீளப் பெற்றுத் தர வேண்டுமா,
அனைத்தையும் இலவசமாக எவ்வித முகவர் கட்டணம் இல்லாமல் பெற்றுக் கொடுக்கும் ஒரே நிறுவனம்
Call us now
142, Pinner Road, Harrow HA1 4JE
Tel: 08002321523 / 020 8427 4060
Fax: 0845 8710197
E-mail: info@accidentcourtesyltd.co.uk
o No excess to pay
o 100% Injury Compensation

**முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்**
**அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்**
**மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய**
**சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமா றெங்கனே**

திருமந்திரம் மூலம் திருமூலர் மக்களுக்குக் கூறும் அறிவுரை, புறக் கண்களால் பார்க்க முடியாதது ஒன்று உண்டு. அகக் கண்களாலேயே அந்த சத்திய தரிசனையைச் செய்யலாம் என்பது அது. அல்லாமலும் புறக் கண்களால் நாம் செய்யும் பாவச் செயல்களே அதிகம் என்பது ‘கண்ணினால் செய் பாவம் கணக்கிலையே, கண்ணிலையானால் கவையிலையே’ என்னும் முதுமொழியாலும் உறுதியாகிறது.

பிறவிக் குருடராகிய தண்டியடிகள் சத்தியத்தைத் தரிசிக்கும் வலுவுடைய அகக்கண் பெற்றவர் என்பதை ‘நாட்டமிகு’ என்னும் பதமூலம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெளிப்படுத்துகிறார். திருவாரூரிற் பிறக்க முத்தி சித்திக்கும் என்பர். தண்டியடிகள் முன்னைப் பிறவிகளில் செய்திருந்த நல்வினைப் பயனால் இப்பிறவி முடிவிலே முத்தியடையத் தகுதி பெற்றிருந்தமையால் திருவாரூரில் அவதரித்தார். அத்தோடு இப்பிறவியிலும் நல்வினையே செய்வதற்கு வாய்ப்பாக ஊனக்கண் பார்வையற்றவராய்ப் பிறந்தார். ஆரூர்ப் பெருமானை அநுதினமும் வழிபடும் நியமம் பூண்டிருந்த அவர் திருவைந்தெழுத்தை அன்புடன் ஓதியும் வந்தார்.

# ‘நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்’

பெரியபுராணத் தொடர் - மு. சிவராசா -

திருவாரூர்த் திருக்கோயிலின் மேற்குப் புறத்திலுள்ள திருக்குளம் தூர்ந்துபோய்ச் செப்பனிடுவாரற்றுக் கிடந்தது. கரை இடிபாட்டுடன் மேடுதட்டியிருந்தது. சமண மதத் துறவியர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, பக்கத்தில் பாழிகள், பள்ளிகள் அமைத்து தமது சமயத்தை வளர்க்கும் பணியில் ஈடுபட்டனர். குளத்தின் நிலைமையை அறிந்த நாயனார் அதனை நன்னிலைப்படுத்த எண்ணினார். குளத்தைத் தூர் எடுத்து, கரைகட்ட வசதியாக நீர்க்கரையிலும் நிலத்திடலிலும் ஒவ்வொரு கழியை நாட்டி, அவை இரண்டையும் தொடுத்துக் கயிறு கட்டினார். குளத்தின் மண்ணை வாரி, கூடையில் இட்டு, கயிற்றின் உதவியோடு வழிநடந்து கரையிற் கொட்டினார். இவ்வாறு குளத்தைச் சீர்செய்யத் தொடங்கினார். இதுகண்ட சமணத் துறவியர் தாம் எதிர்பார்த்த நிலவளம் கிடையாமற் போகுமே என்ற அச்ச உணர்வினால் தண்டியடிகளை அணுகி, ‘குளம் கல்லுவதால், அங்குள்ள புழு, பூச்சிகள் இறந்துபடும். இவ்வாறான உயிர்வதையைக் கைவிடுங்கள்’ என்று வேண்டினர். நாயனார் தாம் செய்யும் புண்ணியச் செயல்பற்றி அவர்களுக்கு எடுத்தக் கூறினார். அவர்களோ அவற்றை மறுத்து, தாம் சொல்வதைக் கேட்காமல் நடந்துகொள்வதால் ‘மந்த உணர்வுடையீர், உமது கண்பார்வை இழந்தமை மாத்திரம் அல்லாமல் காதும் கேளாதோ?’ என்று இகழ்ந்தனர். ஆற்றாமையோடு அடிகள், ‘குருடன் ஆகிய நான் கண்பார்வை பெற்று, நீங்கள் பார்வை இழந்தால் என்ன செய்வீர்கள்?’ என்று கேட்டார். ‘நாம் இவ்வூரை விட்டே போய்விடுகிறோம்’ என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். அத்தோடு அவர் நாட்டிய கழிகளையும் பிடுங்கி எறிந்தனர். நாயனார் ஆரூர்ப்பெருமான் சந்நிதி சென்று குறையிரந்தார்.

அன்று இரவு தண்டியடிகள் கனவில் ஆரூர்ப் பெருமான் தோன்றி, அவர் கண்பார்வை பெறவும் சமணத் துறவியர் கண்பார்வை இழக்கவும் செய்வோம் எனவும் அருளி, அவ்வூர் அரசனின் கனவிலும் தோன்றி, இருசாராரின் பிணக்கைத் தீர்ப்பாயாக எனவும் பணித்தருளினார்.

மறுநாள், சமணத் துறவியரும் தண்டியடிகளும் குளக்கரையிலே கூடினர். அரசனும் வந்திருந்தான். சொன்ன வாக்குக்கமைய நாயனார் திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டு குளத்தில் முழுகினார். முழுகி எழுந்தபோது கண்பார்வை பெற்றிருந்தார். அதே சமயம் சமணர் தம் பார்வையை இழந்தவராயினர். அவர்கள் ஒத்துக்கொண்டபடி ஊரைவிட்டுப் போகும்படி அரசன் அவர்களுக்கு ஆணையிட்டான். தற்போது குருடர்களான அவர்கள் வழி தவறியும், தடுமாறியும் அல்லற்பட்டு திருவாரூரை விட்டு வெளியேறினர். அவர்கள் இருந்த பாழிகளையும் பள்ளிகளையும் அரசன் அழித்து, திருக்குளத்தை நன்னிலைப்படுத்த உதவி நாயனாரைப் பணிந்தான். தண்டியடிகள் தாம் தொடங்கிய திருப்பணியை நிறைவுசெய்து, திருவைந்தெழுத்து வழுவாது ஓதி ஆரூர்ப் பெருமான் திருவடி நீழலை அடைந்து, பேரின்பப் பெருவாழ்வை எய்தினார்.

இனி, மூர்க்க நாயனார் வரலாற்றை உளங்கொள்ளுவோம். திருவேற்காடு என்னும் திருத்தலத்தில் வேளாண் குலத்தில் அவதரித்த இந்நாயனார் பிறந்து, வளர்ந்து, அறிவறிந்த நாள் முதலாக விபூதி, பஞ்சாக்கரம் என்பவற்றின் பெருமையை உணர்ந்து அவற்றைப் போற்றியும் அவற்றைச் சார்ந்து ஒழுகும் சிவனடியார்களுக்கு அமுது அளிப்பதாகிய மாகேசுர பூசை செய்தும் வாழ்வாராயினர். இவர் தொண்டு அறிந்து இவரிடம் வரும் சிவனடியார் தொகை பெருகுவதாயிற்று. இதனால் இவர் கைப்பொருள் முழுதும் தீர்ந்த நிலையில், தமது உடைமையாக இருந்த காணி, நிலம் முதலிவற்றை விற்றும் நியமம் தவறாதவராய் வாழ்ந்து வந்தார். நாளடைவில் வறுமை காரணமாகவும் பொருளீட்ட வேறு வழி கிடையாமையாலும் தாம் இளவயதிற் கற்றிருந்த சூதாட்டம் மூலம் பொருள்தேட முயன்றார். அதற்கு அவ்வூரில் வாய்ப்பு அருமையாக இருந்தது. அயலூரான குடந்தை நகர் சென்று அங்குள்ள பொதுமன்றிறல் சூதாடிப் பொருள்பெற்று அடியவர்க்கு அமுது அளித்துவந்தார். சூதாடும்போது முதற் சூதில் தாம் தோற்று எதிராளி வெல்லும் வகையிற் செயற்படுவார். தொடர்ந்து நடைபெறும் பிற் சூதாட்டங்களில் தாம் வென்று பணம் ஈட்டுவார். சூதாட்டத்தின்போது வாக்குவாதமும் கைகலப்பும் ஏற்படுவதுண்டு. அவ்வாறு வாது செய்து பிணங்குவோரைத் தமது உடைவாளால் குற்றுவார். இந்த மூர்க்க குணம் இவருக்கு மூர்க்கர் என்ற காரணப் பெயரை ஏற்படுத்தியது.

இவ்வாறு ஈட்டும் பொருள் முற்றும் சூதினாலும் மூர்க்கச் செயலினாலும் கிடைத்ததாயினும் அது முழுவதும் மாகேசுர பூசைக்கே உபயோகிக்கப்பட்டது. மாகேசுர பூசையில் அடியவர்கள் அமுது செய்தபின் தாம் கடைசிப் பந்தியில் இருந்து பசியாறுவார். இந்நியமத்தைத் தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து தமது செயலைச் சிவன் செயலாகவும் அதன் பலனைச் சிவனுக்கே அர்ப்பணிப்பவராகவும் வாழ்ந்த நாயனார் தேகாந்தத்தில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

கண்ணின் மணிக ளவையின்றிக் கயிறு தடவிக் குளந்தொட்ட
எண்ணில் பெருமைத் திருத்தொண்டர் பாதம் இறைஞ்சி இடர்நீக்கி
விண்ணில் வாழ்வார் தாம்வேண்டப் புரங்கள் வெகுண்டார் வேற்காட்டூர்
உண்ணி லாவும் புகழ்த் தொண்டர் மூர்க்கர் செய்கை உரைக்கின்றோம்

\- சேக்கிழார்

# சைவ முன்னேற்றச் சங்கத்தின் 33ஆவது ஆண்டு நிறைவு விழா 04.09.2010



பிரதம அதிதியை வரவேற்றல்



33 விளக்குகள் ஏற்றல்





திரு பற்றிமாகரன் அவர்களைக் கௌரவித்தல்




வீணை, நடன நிகழ்வுகள்



முதியோர் நாடகம்



வயலின் இசை



# சங்கத்தின் நவராத்திரி நிகழ்வு 2010









# வயலினுக்கு வயது 80!



**லால்குடி என்றால் வயலின், வயலின் என்றால் லால்குடி என்று சொல்லுமளவுக்கு தம்முடைய ஊருக்கும் இசைக் கருவிக்கும் பெருமை தேடித்தந்த ஸ்ரீ லால்குடி அவர்கள் இவ்வாண்டு 80 வயதை அடைகின்றார்கள். தந்தையார் ஸ்ரீ கோபால ஐயர் வழியிலே பல வர்ணங்கள், தில்லானாக்கள் என்று எண்ணிலாத விலைமதிப்பற்ற உருப்படிகளை உருவாக்கி இசை உகத்துக்கு அளித்ததோடு பல இசைக் கலைஞர்களையும் இசை உலகுக்கு அளித்த பெருமைக்குரியவர் அவர். அன்னாரின் ஊரவரும் நண்பருமான திரு வேதா அவர்கள் தம் இனிய நினைவுகளை இங்கே மீட்டுள்ளார்கள்.**

**1971ஆம்** ஆண்டு மீண்டும் என் நினைவில் வரு கிறது. லால்குடி திரு ஜயராமன் அவர்கள் லண்டன் வந்திருந்தார்கள். லண்டனைச் சுற்றிப் பார்க்க அவரை நான் அழைத்துச் சென்றேன். "நியூ பொண்ட் ஸ்டிறீட்" (நேற டீழனெ ஞுவசநநவ) வழியாகச் சென்றபோது அங்கே 'ஹில்' என்ற பெயரில் ஒரு வயலின் கடை இருந்தது. உள்ளே நுழைந்தோம். அந்தக் கடை-டயில் **'ஸ்டாடிவாரியஸ்'** வயலின் இருந்தது. அவர் அதை வாசிக்க விரும்பினார். அவருக்கோ ஆங்கிலம் அவ்வளவு தெரியாது. அவர் கருத்தை நான் ஆங்கிலத்தில் கடைக்காரருக்கு விளக் கினேன். கடைக்காரருக்கோ ஒரே நடுக்கம். அந்தளவு விலைமதிப்பு வாய்ந்த வயலினை யாரோ ஒருவருக்கு எப்படிக் கொடுப்பது என்று தயக்கம். நான் கடைக்காரரை சாந்தப் படுத்தி, இவர் ஒரு பெரிய வயலின் வித்துவான், யெஹூதி மெனுஹின் இவரின் வாசிப்பைப் பாராட்டி வயலினே பரிசளித்திருக்கிறார் என் றெல்லாம் பரிந்துரைத்தபின் மிகவும் தயக் கத்தோடு ஒரேயொரு நிமிடம் மட்டும் தருவேன் என்று கொடுத்தார். அந்த ஒரு நிமிடம் என் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு நிமிடம். ஸ்டாடிவாரியஸ் வயலின் அது. வாசிப்பவர் லால்குடி. கொடுத்துவைத்த ரசிகன் நான் ஒருவன் மட்டுமே! அரண்டுபோன கடை உரிமையாளர், சிப்பந்திகளைத் தவிர. அந்த ஒரே நிமிடத்தில் **மோஹனம்** அந்த வயலினில் வெள்ளமாகப் பாய்ந்தது. கடைக்காரரின் பயமும் சற்றே விலகி யது. அந்த வயலினின் விலையைக் கேட்டோம். 1971இலேயே அதன் விலை........ ஒரு மில்லியன் பவுண்டு!!

திரு ஜயராமன் அவர்களும் நானும் லால்குடி கீழ அக்ரஹாரத்தில் வசித்தவர்கள். எங்கள் வீட்டி லிருந்து நான்கு வீடுகள் தள்ளி அவர் வீடு. நான் சிறு குழந்தையாய் இருந்தபோதே அவர் என்னை அறிவார். இன்றைக்கும் அவர் தாயார் அதே அன்புடனேயே என்னை உபசரிப்பார்.

திரு ஜயராமன் அவர்களின் குரு அவருடைய தந்தையார் திரு கோபால ஐயர் அவர்கள். மிகவும் கண்டிப்பான மனிதர். சிறுவன் ஜயராமன் வயலினில் பயிற்சி செய்யும்போது எங்களை தள்ளிப்போய் விளையாடச் சொல்வார். என் முதலாம் வகுப்பு ஆசிரியரும் அவரிடம் இசை பயின்றார். என் ஆசிரியருக்கு அப்போதே ஓய்வுபெறும் வயதாகிவிட்டது. அவர் பெயர் சௌந்தரராஜ நாட்டார் என்று நினைக்கிறேன்.

திரு ஜயராமனை கட்டுக்குடுமியுடன் பார்த்தி ருக்கிறேன். அவருடைய சகோதரி பத்மாவதியின் திருமணத்துக்குச் சென்றது நினைவு இருக்கிறது. அந்தக் காலத்தில் கல்யாண ஊர்வலத் துக்கென்றே ஒரு கார் இருக்கும். அதை ஒரு கம்பி கொண்டு முன்னால் உள்ள ஒரு துவாரத் திலே இட்டுச் சுழற்றி இயங்கவைப்பார்கள். அந்தக் காரில் நான் சென்றதும் லேசாக நினைவுக்கு வருகிறது. பின்னர் சில ஆண்டுகளில் திரு ஜயராமன் சென்னைக்குக் குடியேறிவிட்டார். நான் லண்டன் வந்துவிட்டேன்.

இரண்டாவது முறை திரு ஜயராமன் அவர்கள் லண்டன் வந்தபோது, என் நெடுநாளைய நண்பரும் தற்போதைய கலசம் ஆசிரியருமான திரு ஜெகதீஸ்வரன் என் வேண்டுகோளுக் கிசைந்து எங்களைத் தன் காரில் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்றார். மாலையில் விம்பிள்டன் பிள்ளையார் கோயிலில் தன் கணீர் குரலில் திரு ஜயராமன் அவர்கள் "முதாகராத்த மோதகம்" முழுமையாகப் பாடியதும் நினைவுக்கு வருகிறது. 2009 ஏப்பிரல் மாதம் தண்டபாணி தேசிகர் நினைவு விழா சென்னையில் நடந்தபோது திரு ஜயராமன் அவர்களும் திரு ஜெகதீஸ்வரன் அவர்களும் ஒரே மேடையைப் பகிர்ந்து கொண்டார்கள் (வயலின் வாசிப்பதில் அல்ல, பேச்சில்) என்பது இன்னொரு துணுக்குச் செய்தி.

இந்த ஆண்டு தமது எண்பதாவது வயதை அடைந்துள்ள ஓர் இசைமேதையின் அறிமுகம், அருகில் இருந்து பழகும் வாய்ப்பு, அவரைப்பற்றி எழுதும் சந்தர்ப்பம் கிடைத்ததில் நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

# படித்தவர் பகன்றவை

உங்கள் ஆசிரியர் உரை மிகவும் பொருத்தமானதாக, இங்குள்ள மக்களுக்குத் தேவை யானதொன்றாக அமைகிறது; வாசகர் சிந்தனையைத் தெளிவுபடுத்துகிறது. சமூகத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்துவது பத்திரிகையாளர்களின் தலையாய கடமை என்பதை நிரூபிக்கும் வண்ணம் தங்கள் ‘ஆசிரியர் உரை’ பகுதி அமைகிறது. பாராட்டுக்கள்.

திருமதி மனோகரன், லண்டன்

இசைக் கலைஞர்களைப் பற்றி எழுதிவந்த ரிஷி எங்கே போய்விட்டார்? அவரின் ஆக்கங்கள் எதையும் தற்போது வரும் இதழ்களிலே பார்க்க முடியவில்லை!

திரு பாலன், கிங்ஸ்டன்

சுற்றியுள்ள கயிற்றை அவிழ்ப்பதற்கு ஒரு வழிதான் உண்டு. எப்படிச் சுற்றினோமோ அப்படியே மறுபடியும் திருப்பி அவிழ்க்கவேண்டும். அதைப்போலவே தவறான செயல்களை நற் செயல்களினாலும் பாவங்களைப் புண்ணியங்களினாலும் போக்கிக் கொள்ளவேண்டும்.

காஞ்சிப் பெரியவர்

**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

**கலசம்**
**KALASAM**

இலவச காலாண்டிதழ்

**கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?**

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர் :..........................................

முகவரி :..........................................

..........................................

..........................................

..........................................

Donation: £.................

Postage: £.................

Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

kalasam@hotmail.com

Postage and admin : £10 (U.K/Europe) : £ 20 (Rest of the world) (இரு வருடங்களுக்கு)


தரமான தங்கத்திற்கு
இலண்டனிலே சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448



# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை

## SHRI KANAGATHURKKI AMMAN (HINDU) TEMPLE TRUST

5, Chapel Road, West Ealing, London, W13 9AE, UK. (+44) 208 810 0835, (+44) 208 840 0485



ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - திருப்பழுகாமம், மட்டக்களப்பு




ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - மன்னார்




ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - செட்டிப்பாளையம், மட்டக்களப்பு




ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் மணி மண்டபம் வவுனியா




ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் முதியோர் இல்லம் மன்னார்



ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் பதுளை

**இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்**
**கணினி பயிற்சி நிலையம் - யாழ்ப்பாணம்**
**LONDON SRI KANAGA THURKKAI AMMAN**
**COMPUTER TRAINING CENTRE - JAFFNA**
FUNDED BY: SRI KANAGATHURKAI AMMAN TEMPLE TRUST (UK)
ADMINISTERED BY: TAMIL INFORMATION TEHNOLOGY ASSOCIATION

**இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்**
**கணினி பயிற்சி நிலையம் - சாவகச்சேரி**
**LONDON SRI KANAGA THURKKAI AMMAN**
**COMPUTER TRAINING CENTRE - CHAVAKACHCHERI**
FUNDED BY: SRI KANAGATHURKAI AMMAN TEMPLE TRUST (UK)
ADMINISTERED BY: TAMIL INFORMATION TEHNOLOGY ASSOCIATION

**இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்**
**கணினி பயிற்சி நிலையம் - கல்முனை**
**LONDON SRI KANAGA THURKKAI AMMAN**
**COMPUTER TRAINING CENTRE - KALMUNAI**
FUNDED BY: SRI KANAGATHURKAI AMMAN TEMPLE TRUST (UK)
ADMINISTERED BY: TAMIL INFORMATION TEHNOLOGY ASSOCIATION

**இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்**
**கணினி பயிற்சி நிலையம் - திருகோணமலை**
**LONDON SRI KANAGA THURKKAI AMMAN**
**COMPUTER TRAINING CENTRE - TRINCOMALEE**
FUNDED BY: SRI KANAGATHURKAI AMMAN TEMPLE TRUST (UK)
ADMINISTERED BY: TAMIL INFORMATION TEHNOLOGY ASSOCIATION

**எங்கள் அம்மனின் அற்புதங்கள் ஆயிரம்.**
**அவளிடம் முறையிடுங்கள்.**
**அவளை ஆராதியுங்கள்.**
**அளப்பரும் கருணையில் திளைப்பீர்கள்.**
**அவள் பெயரால் அவள் பணிக்கு உதவுங்கள்.**

கோவிலின் செலவுகள் தவிர்ந்த காணிக்கையில் மூன்றில் ஒரு பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களை பராமரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது.

## இது வரை எமது ஆலயத்தினால் தாயகத்திற்கு

# £1,374,728.00

## பவுண்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# ஆசௌசவிளக்கம்

## இறப்பு:

மரண ஆசௌசமே பிரதனமாகப் பேணப்படுவது நம் நாட்டு வழக்கம். அதனால் இப்பகுதி விரிவாக எழுதப்படுகிறது. குழந்தை பிறந்து பெயர் இடுவதற்கு முன் ஒரு மாதத்தினுள் இறந்தால் உடன் சுத்தியாம். பல் முளைக்கும் முன் (6மாதத்துள்)ஆயின் ஒரு நாள் துடக்கு. 11ஆம் ஆண்டுக்குப் பின் முழுத்துடக்கு. பெண்மகவு விவாகம் செய்யுமுன் இறந்தால் பெற்றோருக்கு 3நாள் துடக்கு. விவாகம் நிச்சயித்த பெண் மணவிழாவுக்கு முன் இறந்தால் கணவனும் அவன் உறவினரும் 3 நாள் துடக்குக் காப்பர். பிற ஆத்ம சாந்திக் கிரியைகளும் கணவன் வீட்டாரே செய்யவேண்டும். ஒரு மாதத்தின் பின் இறக்கும் சிசுவைச் சுடலாம், அன்றிப் புதைக்கலாம். 11 வயதுக்குப் பின் சுடுவதே நல்லது.

ஆண் மரித்தால் ஆண்வழியில் ஏழுதலைமுறை வரை துடக்கு காக்கவேண்டும். குரு சீட தொடர்பு பற்றி 3 நாள் காக்க, தாய்வழிப்பாட்டன், பாட்டி, மாமன், மாமி, மருமகன், மகள்வயிற்றுப்பேரன் ஆகியோருக்கு 3 அல்லது 6 நாள் துடக்கு. தானம், வேள்வி,விவாகம் போன்ற நற்கருமங்களுக்கு இடையிலும், போர், உள்நாட்டுக் குழப்பம், மலைச்சரிவு, மரம் விழுதல், பூகம்பம் போன்ற பெரும் ஆபத்துக்களின் மத்தியிலும் வரும் துடக்கு உடனே நீங்கும். ஒரு வாரம் கேட்டு அநுட்டிக்கும் உபசாவ விரதத்தின் இடையில் துடக்கு ஏற்பட்டால் தானம் அருச்சனை இரண்டையும் நீக்கி விரதத்தை அநுட்டிக்கலாம். விவாகம் செய்யும் மாப்பிள்ளை, கன்னியைத் தானம் செய்பவர், கோயில் திருவிழாவோ பிரதிஷ்டையோ செய்யும் ஆசாரியார், செய்விப்பவர் (எஜமானர்) துணைப் பணிகள் செய்வோர் ஆகியவர்களுக்கு உடன் சுத்தியாம். சிரார்த்தம், யாத்திரை ஆகிய புண்ணிய கருமங்களைச் செய்யும் போது துடக்குண்டானால் உடன் சுத்தியாம்.

### வீர மரணம்:

அரசசேவகர் போரில் இறந்தால் சுற்றத்தாருக்கு உடன் சுத்தி. அவ்விதம் இறந்தவர்களுக்கு அபரக்கிரியையும் உடன் செய்யலாம். (துர்மரணத்திற்போல குறித்த காலத்தின் பின் செய்ய வேண்டும் என்ற விதியில்லை)

### துர்மரணம்

இது இருவகைப்படும்

1) புத்திபூர்வமானது

2) அபுத்திபூர்வமானது

முதல்வகையில் சாதாரண (மந்திரமின்றி)மரணக்கிரியை(சுடுதல்) செய்யலாம்.
பின்னர் உரியகாலத்தில் செய்யும்போது,மந்திரத்துடன் கிரியை செய்யலாம். இதில் சபிண்டருக்குத் துடக்கு இல்லை. ஸ பிண்டர் தென்புலத்தாருக்குப் பிண்டம் இடும் கடன் உள்ள உறவு முறைக்குள் அடங்குவோர். தன்னையும் சேர்த்து ஏழு தலைமுறை (ஆண்வழியில்). பின்னர் ஆறு மாதம் அல்லது ஒரு வருடம் கழித்துக் கிரியை செய்யும் போது ஒரு நாள் காக்க வேண்டும். (மூளைப்பிசகினால் தற்கொலை செய்தவருக்கு நீர்க்கடன் செய்து, துடக்குக் காக்கலாம் என்பர்) இரண்டாவது வகையான துர்மரணம் இடி. தீ, ஆற்றுப்பெருக்கு, விஷக்கடி போன்ற திடீர் விபத்துக்களால் நிகழ்வது. இதில் கிரியையும் ஆசௌசமும் கொள்ளலாம்.

**பொருள்கள் சுத்தி**

துடக்கு உடையவர் உபயோகித்த பொருள்கள் குற்றம் உடையன. அவர் துடக்கு முடியும் போது நீர்தெளித்தல், கழுவுதல் போன்றவற்றால் குற்றம் நீங்கும். துடக்கு ஆரம்பிக்கும் முன் சில நற்கருமங்களுக்கு எனக் குறித்தி எடுத்துவைத்த பொருட்களுக்கு குற்றமில்லை. (தானம், பூசை, முதலியவற்றிற்கு உபயோகிக்கலாம்.) பொன், தானியம், வெல்லம், உப்பு, பால், நெய் முதலியவற்றை துடக்கு வீட்டில் இருந்து பெறலாம்.

# இசை அழிவதில்லை

காரைக்குடி R கிருஷ்ணமூர்த்தி



சொருபன் சர்வானந்தன் என்ற சிறுவனுக்கு மிருதங்க அரங்கேற்றம் ஏற்பாடாகியிருந்தது. அந்த நிகழ்ச்சிக்கு பாடுவதற்கு ஸ்ரீமதி எம் எல் வசந்தகுமாரி அவர்களின் சிஷ்யை பிரபாவதியை ஒழுங்கு செய்வதாக முடிவு செய்து திகதியும் குறித்தாகிவிட்டது. ஆனால் இதற்கிடையில் நான் மலேசியா, இந்தோனேசியா என்று வெளிநாடு போய்விட்டேன். அங்கு விபத்தில் என் கால் முறிவு ஏற்பட நான் சென்னையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தேன். அதே சமயம் பிரபாவதி அவர்களின் பயண ஒழுங்குகளிலே தாமதம் ஏற்பட்டதால் அவர் அரங்கேற்றத்துக்கு வரமுடியாது என்று தெரிவித்துவிட்டார். இந்த விடயம் எனக்குத் தெரிந்ததும் யாரை அழைப்பது என்று யோசித்தவண்ணம் இருந்தேன். அப்போது என் நெடுநாளைய நண்பரும் சென்னை அரசினர் இசைக்கல்லூரியில் இசைக்குப் பொறுப்பாக இருந்தவருமான திரு வி ஆர் கிருஷ்ணன் அவர்கள் என்னைப் பார்க்க மருத்துவ மனைக்கு வந்திருந்தார்கள். என் நிலையை அவருக்கு விளக்கி, பாட ஒருவர் வேண்டும் என்றேன். “என் சிஷ்யன் ஒருத்தன் இருக்கான். அவனை அழைச்சிண்டு வர்றனே!” என்றதோடு மருத்துவ மனைக்கு அழைத்துக்கொண்டே வந்துவிட்டார். நான் பாடும்படி கேட்டவுடன் அந்த மாணவன் சாவேரி ராகத்தில் அமைந்த வர்ணம் பாடினான். கேட்டதுமே எனக்கு மிகவும் திருப்தியாக இருந்ததால் பல்லவியோடேயே நிறுத்தச் சொல்லிவிட்டு பாஸ்போர்ட் இருக்கா, வெளிநாடு போகச் சம்மதமா போன்ற கேள்விகளைக் கேட்டு முடிவு செய்து அழைத்துவந்தேன்.

**குற்றாலம் நாகராஜன்** என்ற அந்த மாணவர் முதன்முதல் மேடையில் முழுக்கச்சேரி செய்தது அந்த அரங்கேற்றத்திலேதான். சிறுவயது முதலே இசையில் நாட்டமுள்ளவராகவே அவர் இருந்தார். சென்னை அரசினர் இசைக் கல்லூரியில் தன் திறனை வளர்த்துக்கொண்டார்.

நடனத்துக்குப் பாடும்போது கச்சேரி போலப் பாடமுடியாது. ‘பாவம்’ முக்கியம். பிர்கா போட்டால் சோகம் வரவேண்டிய இடத்தில் பாவம் போய்விடும். அதுபோல நடனத்துக்கு இசை அமைப்பதும் ஒரு கடினமான விஷயம். இப்படியான பல நுணுக்கங்களை என்னிடமிருந்து மிக விரைவாகக் கற்று நடனத்துக்குப் பாடும் சிறந்த ஓர் இசைக்கலைஞனாக திரு நாகராஜன் மிளிர்ந்தார். இன்று அவர் நம்மிடை இல்லை. ஆனால் இசையில் ஆர்வமுள்ள அனைவரது காதுகளிலும் அவர் இசை ஒலித்துக்கொண்டே இருக்கும்.

இரு மாதங்களுக்கு முன் நான் சென்னையில் இருந்தேன். என் வீட்டு முன் தெருவில் ஒரு சிறிய விநாயகர் சந்நிதி உண்டு. வெளியே போகும்போது அந்த விநாயகரை வணங்கிவிட்டே போவது வழக்கம். அன்று அப்படி நான் போனபோது ஒரு சிறுவன் மிக அழகாக, இனிமையான குரலில் ஸ்லோகம் ஒன்றைப் பாடி வழிபட்டுவிட்டு சென்றான். இவனுக்கு இசையில் நல்ல எதிர்காலமுண்டு என்று நான் சொல்ல, ‘அது யார் தெரியுமோ? நம்ம நாகராஜனோட பையனுங்க’ என்றாள் என் மனைவி.

# DON'T SIGN ANYTHING UNLESS YOU SEE THIS SIGN

INDEPENDENT FINANCIAL ADVISER

Only an Independent Financial Adviser
work for you in recommending the best life assurance,
pensions or unit trusts on the market.
To be sure you get the best deal, contact us.

Mint Financial Services Limited

Rama & Company
Independent Financial Advisers

Rama

Rama & Company is an appointed representative of MINT FINANCIAL SERVICES LIMITED,
which is authorised and regulated by the Financial Services Authority.

**3 The Orchard, Wickford, Essex, SS12 0HB. England**

Tel: (01268) 766624 Mobile: (07956) 369557 Fax: (01268) 561805
Email: rama@mintzone.com

# திருமுறைகளில் சிதம்பரம்

ச.வேதநாராயணன்

சிதம்பரத் தலத்தின் மேல் பதினோரு தேவாரப் பதிகங்கள் பாடப்பட்டுள்ளன. திருநாவுக்கரசர் எட்டு பதிகங்களும், திருஞானசம்பந்தர் இரு பதிகங்களும் சுந்தரர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர். திருவாசகத்தில் தில்லையில் அருளிய பதிகங்கள் இருபத்து இரண்டு. திருக்கோவையார் திருச்சிற்றம்பலவனையே கருப்பொருளாய் வைத்துப் பாடப்பட்டுள்ளது. ஒன்பதாம் திருமுறையில் பட்டினத்துப் பிள்ளையார்--கோயில் நான்மணிமாலை, நம்பியாண்டார் நம்பி--கோயில் திருப்பண்ணியர் விருத்தம் ஆகியன சிதம்பரத்தைப் பற்றிய பாடல்கள்.

திருமந்திரத்தைத் தவிர்த்து ஏனைய திருமுறைகளில் சிதம்பரம் என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை. கோயில் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாகக் கோயில் என்றாலே அது சிதம்பரத்தைத் தான் குறிக்கும். மற்றப் பெயர்களாக பெரும்பற்றப்புலியூர், தில்லை அம்பலம் என்பவையும் குறிக்கப் பெறுகின்றன.

பெரும்பற்றப் புலியூரைத் தவிர்த்து எருக்கத்தம்புலியூர், பாதிரிப்புலியூர், ஓமாம்புலியூர், பெரும்புலியூர் ஆகிய திருமுறைத் தலங்களும் உள்ளன. அதே போல் அம்பர் பெருங்கோயில், கண்ணார்கோயில், வைகல்மாடக்கோயில் ஆகிய தலங்களும் பாடல் பெற்றவை ஆகும். அம்பலம் என்பது கோட்டூர் மணியம்பலத்தையும் குறிக்கிறது.

**திருமந்திரத்தில் சிதம்பரத்தைப் பற்றிய குறிப்புகள்**

| | |
|---|---|
| தந்திரம் 4--1அசபை | 884--886 2தேவர் உறைகின்ற சிதம்பரம் என்றும் |
| தந்திரம் 7--3பிண்ட லிங்கம் | 1726--1726 2 மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம் |
| தந்திரம் 9--1 குருமட தரிசனம் | 2649--2653 4 சிதம்பரம் தற்குகை ஆதாரம் தானே |
| தந்திரம் 9--8 திருக்கூத்து தரிசனம் | 2722--2721 2 எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம் |
| தந்திரம் 10--18 அதிகப்படியான பாக்கள் | 3048--3101 திருமந்திரமே சிதம்பரம் தானும் |

**தில்லை/கோயில்/பெரும்புற்றப்புலியூர் மேல் பாடப்பெற்றவை.**

| | | |
|---|---|---|
| திருமுறை 01 | கற்றாங்கு எரியோம்பி கலியை வாராமே | குறிஞ்சிப்பண் |
| திருமுறை 03 | ஆடினாய் நறு நெய்யொடு | காந்தார பஞ்சமம் |
| திருமுறை 04 | கருநட்ட கண்டனை | திருவிருத்தம் பண்கொல்லி |
| திருமுறை 04 | பாளையுடை கமுகோங்கி | திருவிருத்தம் பண்கொல்லி |
| திருமுறை 04 | செஞ்சடைக் கற்றை முற்றத்து | திருநேரிசை பண்கொல்லி |
| திருமுறை 04 | கருநட்ட கண்டனை | கருநட்ட விருத்தம் |
| திருமுறை 05 | அன்னம் பாலிக்கும் தில்லை | திருக்குறுந் தொகை |
| திருமுறை 05 | பனைக்கை மும்மத வேழம் | திருக்குறுந்தொகை |
| திருமுறை 06 | அரியானை அந்தணர்தம் சிந்தையானை | பெரியதிருத்தாண்டகம் |
| திருமுறை 06 | மங்குல் மதி தவழும் | புக்க திருத்தாண்டகம் |
| திருமுறை 07 | மடித்தாடும் அடிமைக்கண் | குறிஞ்சிப் பண் |

திருமுறை 08 திருவாசகப் பதிகங்களாவன:

02) கீர்த்தித் திருவகவல் 03) அண்டப் பகுதி 04) போற்றித் திருவகவல்
10) திருக்கோத்தும்பி 11) திருத்தெள்ளேணம் 12) திருச்சாழல்
13) திருப்பூவல்லி 15) திரு தோள்நோக்கம் 17) அன்னை பத்து
18) குயில் பத்து 19) திருத்தசாங்கம் 21)கோயில் மூத்த திருப்பதிகம்

22) கோயில் திருப்பதிகம் 31) கண்ட பத்து 35) அச்சப்பத்து
40) குலாப்பத்து 44) எண்ணப் பதிகம் 45) யாத்திரைப் பத்து
46) திருப்படை எழுச்சி 49) திருப்படை ஆட்சி 50) ஆனந்த மாலை
51) அச்சோ பத்து

**திருமுறை 08 திருக்கோவையார் முழுவதும்**

திருமுறை 09 திருமாளிகைத் தேவர் ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
திருமுறை 09 திருமாளிகைத் தேவர் உயர்கொடி யாடை மிடை படலத்தின்
திருமுறை 09 திருமாளிகைத் தேவர் உறவாகிய யோகமும் போகமுமாய்
திருமுறை 09 திருமாளிகைத் தேவர் இணங்கிலா ஈசன் நேசத்து இருந்த
திருமுறை 09 கருவூர்த் தேவர் கணம் விரி குடுமிச் செம்மணிக் கவை
திருமுறை 09 பூந்துருத்தி நம்பி காடநம்பி முத்து வயிரமணி மாணிக்க மாலைகண்மேல்
திருமுறை 09 கண்டராதித்தர் மின்னார் ஊருவம் மேல் விளங்க
திருமுறை 09 வேணாட்டடிகள் துச்சான செய்திடினும் பொறுப்பரன்றே
திருமுறை 09 திருவாலியமுதனார் மையல் மாதொரு கூறன் மால்விடையேறி
திருமுறை 09 திருவாலியமுதனார் பவளமால் வரையைப் பனிபடர்ந்து
திருமுறை 09 திருவாலியமுதனார் அல்லாய்ப் பகலாய் அருவாய் உருவாய்
திருமுறை 09 திருவாலியமுதனார் போல மலர் நெடுங்கண் கொவ்வை
திருமுறை 09 புருடோத்தம நம்பி வாரணி நறுமலர் வண்டு கிண்டு
திருமுறை 09 புருடோத்தம நம்பி வானவர்கள் வேண்ட வளர்நஞ்சை உண்டார்
திருமுறை 09 சேதிராயர் சேலுலாம் வயல் தில்லையுளீர்
திருமுறை 09 சேந்தனார்- திருப்பல்லாண்டு மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்

திருமுறை 11 பட்டினத்துப் பிள்ளையார் கோயில் நான்மணிமாலை
பூமேல் அறியா மோலிப் புறத்ததே
திருமுறை 11 நம்பியாண்டார் நம்பி கோயில் திருப்பண்ணியர் விருத்தம்
நெஞ்சம் திருவடிக்கீழ் வைத்து

**சிதம்பரத்திற்கே உரிய மேற்கூறிய பதிகங்களைத் தவிர்த்து ஏனைய பதிகங்களில் சிதம்பரத்தைப் பற்றிய குறிப்புக்கள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளையும் பார்ப்போம்.**

## பெரும்பற்றப் புலியூரைப் பற்றிய குறிப்புக்கள்

**ஆறாம் திருமுறை (பாட்டு எண், வரி எண்)**

நாகை 2 2 பெண்ணானை ஆணானைப் பேடியானைப் பெரும்பற்றத்
தண்புலியூர் பேணினானை
வீழிமிழலை 5 1 புடைசூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப்
புலியூர்ச் சிற்றம்பலத்தே நடமாடுவார்
வீழிமிழலை 6 1 பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பா ழிய்யார்
பெரும்பற்றப் புலியூர் மூலட்டானத்தார்
அடைவுத் தாண்டகம்4 2 பெரும்பற்றப் புலியூரும் பேராவூரும்
புத்தூர் 5 2 பெருமருவு பேருலகில் பிணிகள் தீர்க்கும்
பெரும்பற்றத் தண்புலியூர் மன்றாடி காண்

**திருமுறை 07**

இடையாறு 5 2 பிறையனூர் பெருமூர் பெரும்பற்றப் புலியூர்
ஊர்த்தொகை 9 1 புலியூர்ச் சிற்றம்பலத்தாய் புகலூர்ப் போதா மூதூரா

**தில்லையைப் பற்றிய குறிப்புக்கள் கீழே உள்ளன**

**திருமுறை 02**

| | | | |
|---|---|---|---|
| க்ஷேத்திரக் கோவை | 1 | 1 | அரூர்தில்லை யம்பலம் வல்லந்நல்லம் |
| வாழ்கொளிப்புத்தூர் | 9 | 3 | மூன்றில் மாமலர் வாசம் முதுமதி தவழ்பொழில் தில்லை |

**திருமுறை 03**

| | | | |
|---|---|---|---|
| உசாத்தானம் | 2 | 4 | தில்லையான் உறைவிடந் திருவுசாத் தானமே |

**திருமுறை 04**

| | | | |
|---|---|---|---|
| ஆவடு துறை | 4 | 1 | பெருமை நன்றுடைய தில்லை என்று நான் பேச மாட்டேன் |
| பவளத்தடவரை விருத்தம் | 3 | 3 | நாவா யசைத்த வொலியொலி மாறிய தில்லையப்பால் |

**திருமுறை 05**

| | | | |
|---|---|---|---|
| பராய்த்துறை | 6 | 3 | தில்லையான் தென்பராய்த்துறைச் செல்வனை |
| சோற்றுத்துறை | 1 | 2 | தில்லைச் சிற்றம்பலத்துறை செல்வனார் |
| பூவனூர் | 5 | 3 | தில்லையூர் திரு ஆரூர் சீர்காழி நல் |
| கோடிகா | 3 | 2 | தில்லையம்பலத் தில்லுறை செல்வனார் |

**திருமுறை 06**

| | | | |
|---|---|---|---|
| அதிகை | 3 | 4 | தில்லைச் சிற்றம்பலம் மேயாய் போற்றி திருவீரட் டானத்தெஞ்செல்வா போற்றி |
| அதிகை (காப்புத் தாண்டகம்) | 1 | 2 | தில்லைச் சிற்றம்பலமுந் தென்கூடலுந் தென் னானைக்காவுஞ் |
| ஆரூர் அரநெறி | 6 | 1 | தாயவனை யெவ்வுயிர்க்குந் தன்னொப் பில்லாத் தகு தில்லை நடம்பயிலுந் தலைவன் |
| ஆரூர் | 3 | 3 | மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை |
| புள்ளிருக்கு வேளூர் | 6 | 1 | அறையார் பொற் கழலார்ப்ப அணியார் தில்லை |
| க்ஷேத்திரக் கோவை | 1 | 1 | தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன் பள்ளி தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர் |
| கோடிகா | 6 | 7 | கொடிமலிந்த மதில் தில்லைக் கூத்தன் கண்டாய் |
| சாய்க்காடு | 1 | 4 | தில்லை நடமாடுந் தேவர் போலும் |
| ஆலம்பொழில் | 4 | 3 | தாரமுதாம் அணிதில்லைக் கூத்தன் தன்னைக் |
| ஆயமந்தீர் தாண்டகம் | 7 | 1 | அணிதில்லை அம்பலமா டரங்காக் கொண்டார் |

**திருமுறை 07**

| | | | |
|---|---|---|---|
| நாவலூர் | 6 | 3 | ஆட்டங் கொண்டார் தில்லைச்சிற்றம்பலத்தே |
| திருத்தொண்டத்தொகை | 1 | 1 | தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் |
| கோலக்கா | 4 | 6 | தில்லை அம்பலத்துள் நிறைந்து ஆடும் |
| கானப்பேர் | 5 | 5 | தில்லைநகர்ப் பொதுவுற்று ஆடியசீர் நடமும் |

**திருமுறை 08**

**- திருவாசகம்**

| | | | |
|---|---|---|---|
| சிவபுராணம் | 9 | 10 | தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே |
| திருச்சதகம் -அநுபோக சுத்தி | 5 | 4 | சிவனே தென் தில்லைக் |
| திருச்சதகம்-காருணியத்து இரங்கல் | 1 | 6 | போற்றி தில்லை |
| திருச்சதகம்-காருணியத்து இரங்கல் | 7 | 5 | செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் |
| திரு எம் பாவை | 2 | 7 | தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள் |
| திரு எம் பாவை | 12 | 2 | தீர்த்தன் நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீ ஆடும் |

| | | | |
|---|---|---|---|
| திரு அம்மானை | 5 | 5 | தில்லை நகர் புக்கு சிற்றம்பலம் மன்னும் |
| திருப்பொன் சுண்ணம் | 9 | 7 | ஐயன் அணி தில்லை வாணனுக்கே |
| திருப் பொன் சுண்ணம் | 19 | 3 | சிட்டர்கள் வாழும் தென் தில்லை பாடி |
| திருத் தோள் நோக்கம் | 2 | 3 | குன்றாத சீர்த் தில்லை அம்பலவன் குணம் பரவி |
| வாழாப் பத்து | 4 | 3 | தில்லை வாழ் கூத்தா சிவபுரத்து அரசே |
| சென்னிப் பத்து | 4 | 4 | தில்லை மூதூர் நடம் செய்வான் |

**திருமுறை 10**
**-திருமந்திரம்**

தந்தி 04- 5 சத்தி பேதம் - திரிபுரை சக்கரம்
1045-1065 2வண்தில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது
தந்தி 09- 8அ திருக்கூத்து தரிசனம்
2722-2722 3பொற்பதிக்கூத்தினைப் பொன் தில்லைக் கூத்தனை
தந்தி 09- 8இ சுந்தரக் கூத்து
2732-2732 3திடம் உற்று எழும் தேவதாருவும் தில்லை
தந்தி 09- 8ஈ பொற்பதிக் கூத்து
2739-2742 1 மாணிக்கக் கூத்தனை வண் தில்லைக் கூத்தனைப்

திருமுறை 11

ஐயடிகள் காடவர்கோன்- க்ஷேத்திரத் திருவெண்பா 1 4
தில்லைச் சிற்றம்பலமே சேர்
சேரமான் பெருமாள் -பொன்வண்ணத்தந்தாதி 77 4
கழியக்கண்டான்தில்லைக் கண்ணுதலான்
சேரமான் பெருமாள் -பொன்வண்ணத்தந்தாதி 84 3
தேவனைத் தில்லைச் சிவனைத் திருந்தடி கைதொழுது
நக்கீரர் - கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி 97 4
பெருமான் தில்லை பிழை
கபிலதேவ நாயனார் - சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை 24 3
மயிலியல் மாமறைக் காடர் வெண் தில்லை
பரணதேவ நாயனார்- சிவபெருமான் திருவந்தாதி 17 2
ஆங்கு உரைக்கலாம் பொன் அணிதில்லை ஆங்கு
பட்டினத்துப் பிள்ளையார் --திருவேகம்பமுடையார் திருவந்தாதி 47 3
கடனன்றி மற்றறியாத் தில்லை அம்பலம்
நம்பியாண்டார் நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி 2 1
செப்பத் தகு புகழ்த் தில்லைப்பதியில் செழுமறையோர்
நம்பியாண்டார் நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி 21 1
நாவார் புகழ்த் தில்லை அம்பலத்தான் அருள் பெற்று
நம்பியாண்டார் நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி 59 2 பொன்னகராய நல தில்லை ஈசனைச் சூழமறைவளர்த்தான்
நம்பியாண்டார் நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி 72 3 வகுத்த மதில் தில்லை அம்பலத்தான் மலர்ப் பாதங்கள்
நம்பியாண்டார் நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி 83 3 வம்பு மலர்த் தில்லை ஈசனைச் சூழ மறைவளர்த்தான்
நம்பியாண்டார் நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி 89 1 பணித்த நல்தொண்டத் தொகை முதல் தில்லை
நம்பியாண்டார் நம்பி - ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி 68 1 தேறும் புனல் தில்லைச் சிற்றம்பலத்துச் சிறந்து
நம்பியாண்டார் நம்பி - ஆளுடைய பிள்ளையார் திரு மும்மணிக்கோவை 18 4 பிழைக்கின்ற தில்லை நற்றேர்

**சிற்றம்பலத்தைப் பற்றிய குறிப்புக்கள்**

திருமுறை எண் 1 செய்காட்டங்குடி 9 3 தேனூரான் செங்காட்டங்குடியான் சிற்றம்பலத்தான்
திருமுறை எண் 2 திருக்களர் 7 6 அம்பலத் துறைவாய் அடைந்தார்க் கருளாளே
திருமுறை எண் 5 பாவநாசக் குறுந்தொகை(1) 7 3 ஆடல் வேடத்தன் அம்பலக் கூத்தனைப்
திருமுறை எண் 6 புள்ளிருக்குவேளூர் 6 2 அம்பலத்துள் நடமாடும் அழகன் தன்னைக்
ஆலங்காடு 7 2 ஐயாறும் ஆரூரும் ஆனைக்காவும் அம்பலமும் கோயிலாக்

திருமுறை எண் 7 அநேகதங்காவதம் (வடநாடு) 2 2 வேறு படக்குட கத்திலை யம்பலவாணன்

**திருவாசகம்**

திருச்சதகம்--அறிவுறுத்தல் 8 2 அம்பரவா அம்பலத்து எம்
திருச்சதகம்--அநுபோக சுத்தி 1 7 தேசனே அம்பலவனே செய்வது
திருச்சதகம்--ஆனந்தாதீதம் 10 3 ஆடவேண்டும் நான் போற்றி அம்பலத்து
திரு எம் பாவை 14 3 சீதப் புனல் ஆடி சிற்றம்பலம் பாடி

திருப்பொன் சுண்ணம் 11 7 ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு
திருப்பொன் சுண்ணம் 19 4 சிற்றம்பலத்து எங்கள் செல்வம் பாடி
திரு ஏசறவு 6 4 அஞ்சேல் என்று ஆண்ட ஆறு அன்றே அம்பலத்து அமுதே

**திருமந்திரத்தில் தந்திரம்** 4 (அசபை), வயிரவி மந்திரம், தந்திரம் 6 சிவகுரு தரிசனம், தந்திரம் 8 பரலட்சணம், தந்திரம் 9 பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக் கூத்து ஆகிய இடங்களில் பல குறிப்புக்கள் உள்ளன. அதிகப்படியாக் கிடைத்துள்ள பாடல்களில் (3095) சித்தான நந்தி தென்னம்பலத்து ஆடுமே, (3108) மேலைத் திருவம்பலத்தா மிகுகலை என்பன காணப்படுகின்றன.

**திருமுறை 11**

ஐயடிகள் காடவர் கோன் - க்ஷேத்திரத் திருவெண்பா 1 3 நல்லச் சிற்றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
பரணதேவ நாயனார்- சிவபெருமான் திருவந்தாதி 17 3 அம்பலத்தும் அண்டத்தும் அப்பாலுமாய் நின்ற
பரணதேவ நாயனார்- சிவபெருமான் திருவந்தாதி 26 1 அடுத்த பொன் அம்பலமே சால்வும் அதனுள்
பரணதேவ நாயனார்- சிவபெருமான் திருவந்தாதி 45 1 ஆர் துணையா ஆங்கு இருப்பது அம்பலவா அஞ்சல்
பரணதேவ நாயனார்- சிவபெருமான் திருவந்தாதி 86 3 ஆடுவதும் பாடுவதும் காலனைப் பொன் அம்பலத்துள்
நம்பியாண்டார் நம்பி- திருத் தொண்டர் திருவந்தாதி 66 1 சிங்கத்து உருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு
நம்பியாண்டார் நம்பி- திருத் தொண்டர் திருவந்தாதி 83 1 செம்பொன் அணிந்து சிற்றம்பலத்தைச் சிவலோகம்
நம்பியாண்டார் நம்பி -ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி 68 1 தேறும் புனல் தில்லைச் சிற்றம்பலத்துச் சிறந்து
நம்பியாண்டார் நம்பி -ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை 1 65 உருவு பெற வகுத்த அம்பலமும் ஓங்கு

கற்றாங் கெரியோம்பி கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே



# கண்ணனும் தாத்தாவும்

-முத்து-

வழக்கத்திற்கு மாறாக இந்த வருடம் கோடை காலம் மழையோ குளிரோ இல்லாமல் ஆனி ஆடி மாதங்களெல்லாம் சூடாகவே இருக்கின்றன. மனதிற்கும் உடலுக்கும் இதமான காலநிலை. கண்ணனுக்கும் ஆங்கிலப் பள்ளி மட்டுமன்றித் தமிழ்ப்பள்ளி கூடக் கோடை விடுமுறைக்காக மூடப்பட்டுவிட்டது. கண்ணனும் தாத்தாவும் கடைத்தெரு, கோயில், நூலகம், பூங்கா என்று நாளொரு இடமாகச் சந்தோஷமாகச் சுற்றி வருகின்றனர். இன்று வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் பூங்காவுக்குச் செல்கின்றனர். அங்கே பலவிதமான பூச்செடிகளையும் பார்த்து ரசித்து மகிழ்கின்றனர். அவைகள் யாவும் பாத்திகளில் மிக அழகாக வரிசையாக நேர்த்தியாக நடப்பட்டிருந்தன. பலவர்ணங்களில் பூத்துக்குலுங்கிக் கண்ணனைக் கவர்ந்தன. கண்ணன் எல்லாவற்றையும் தொட்டுத் தொட்டுப்பார்த்து மகிழ்ந்தான்.

**கண்ணன்:** எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் அலுக்கவே மாட்டாது இந்தப் பூக்களின் கொள்ளை அழகு, என்ன தாத்தா?

**தாத்தா:** ஆமாம் கண்ணா! இதன் அழகை நேரம் போவது தெரியாமல் இரசிக்கலாம்.

**கண்ணன்:** இதே போல அழகான பூச்செடிகள் இலங்கையில் இருக்கிறதா தாத்தா?

**தாத்தா:** இங்குள்ள எல்லாச் செடிகளும் அங்கேயில்லை. சூட்டைத்தாங்கக் கூடிய செவ்வரத்தை, ரோஜா, மல்லிகை, முல்லை, செவ்வந்தி போன்றவையுண்டு. கண்டி நுவரெலியா போன்ற குளிர்ந்த இடங்களில் இங்குள்ள பெரும்பாலான செடிகள் உண்டு.

**கண்ணன்:** நாங்கள் எல்லோரும் சிறீலங்காவுக்குப் போய்ச் சுற்றிப் பார்க்கலாமா தாத்தா?

**தாத்தா:** நிச்சயமாகக் கண்ணா. சிறிலங்காவில் பார்த்து ரசிக்கக் கூடிய பல இடங்கள் இருக்கின்றன.

**கண்ணன்:** ஒவ்வோர் இடமாகச் சொல்லுங்கோ தாத்தா

**தாத்தா:** சரி வா! அந்த நீரோடைக்குப் பக்கத்திலுள்ள வாங்கில் (பெஞ்ச்) இருந்து கதைப்போம்.

**கண்ணன்:** அது நல்லயோசனை. அந்தப்பெரிய மர நிழலும் நீரோடையிலிருந்து வரும் காற்றும் நல்ல குளிர்ச்சியாக இருக்கும்.

**தாத்தா:** ஆமாம் கண்ணா! அதற்காகத்தான் நானும் சொன்னேன்.

*(கண்ணனும் தாத்தாவும் வீட்டிலிருந்து கொண்டு வந்த குளிர்பானத்தைப் பருகிக் கொண்டே அந்த வாங்கில் அமர்கின்றனர்.)*

**கண்ணன்:** தாத்தா! சிறிலங்காவில் உங்களுக்கு மிக மிகப் பிடித்த இடம் எது?

**தாத்தா:** ஒரு இடமல்ல. நிறைய இடங்களைச் சொல்லலாம். ஒவ்வொரு ஊரும் ஏதோ ஒருவிதத்தில் அழகும் வரலாற்றுப் பெருமையும் கொண்டது. அங்குள்ள பல இந்துக்கோயில்கள் பலநூறு வருடங்கள் முன்பு தமிழ்ப்பிரதேசங்களை ஆண்ட மன்னர்களால் கட்டப்பட்டவை.

**கண்ணன்:** மருதடிப் பிள்ளையார் அல்லது பரராஜசேகரப் பிள்ளையார் என்று சொல்லப் போகிறீர்கள் என்று நினைத்தேன் தாத்தா.

**தாத்தா:** எல்லாக் கோயில்களுக்கும் நான் விரும்பிப் போவேன். யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான மக்கள் குறிப்பாகத் திருவிழாக்காலங்களில் தங்கள் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு முக்கியமான கோயில்கள் எல்லாவற்றுக்கும் போவார்கள். கோயிலுக்குப் போவது மக்களின் முக்கிய கடமையாகப் பேணப்பட்டு வந்தது.

**கண்ணன்:** முக்கியமான கோயில்கள் என்று எவற்றைச் சொல்லுகிறீர்கள் தாத்தா?

**தாத்தா:** நல்லூர் முருகன், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, வல்லிபுரக்கோயில், மருதடிப்பிள்ளையார், நயினை நாகபூசணி அம்மன் என்பவை பிரபலமானவை. இதனைவிட ஒவ்வொரு ஊரிலும் பல கோயில்கள் உள்ளன. கோயில் வழிபாடு முக்கியமானதொன்று எம்முன்னோரால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதனால் கோயில் இல்லாத ஊரில் ஊடியிருக்கக் கூடாது என்ற பழமொழியும் வந்தது.

**கண்ணன்:** அதனால் தான் இலண்டனில் மட்டுமல்ல, பிரித்தானியாவில் தமிழர்கள் வாழும் இடமெல்லாம் கோயில் கட்டுகிறார்கள் போலிருக்கு, என்னதாத்தா?

